Registered as a NewsPaper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 28 (10 - 04 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை: 52

## க. பொ. த. (சா) பரீட்சை முன்னணி முடிவுகள்

நேற்று வெளியான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி யாழ். நகரப் பாடசாலைகளின் சிறந்த பெறுபேறுகள் விபரம் வருமாறு. யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் ஏழு பாடங்களில் விசேட சித்தியடைந்தோர் ஏழு மாணவர்கள் ஆவர். இவர்களுக்குச் சங்கீத பாடத்தின் முடிவு கிடைக்கவில்லை. இருவர் ஏழுவிசேட சித்திகளையும், ஒரு திறமைச்சித்தியையும் பெற்றுள்ளனர் (8ஆம்பக் பார்க்க)

# கொழும்பில் அரசியல் நெருக்கடி;

# பிரேமா பதவிவிலக சிறிமா கோரிக்கை

## உடுகம்பொலவின் அறிக்கையின் எதிரொலி

(கொழும்பு)

தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி தீவிரமாகி வருகின்றது. கறுப்பு பூனைகள் என்னும் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய கொலைகாரப்படையினால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர் என தற்பொழுது கட்டாய லீவில் நிற்கும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல தெரிவித்ததைத் தொடர்ந்து நெருக்கடி தீவிரமாகியுள்ளது. கறுப்பு பூனைகள் மேற்கொண்ட கொலைகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசா பொறுப்பேற்று பதவிவிலக வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை அரசிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவும பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தவும் எதிர்க்கட்சிகள் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களே கறுப்புப்பூனைகள் என்ற பெயரில் எதிர்க்கட்சி ஆதரவாளர்களைப் படுகொலை செய்ததாக முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல தெரிவித்ததை அடுத்து ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க கேட்டுள்ளார்.

கடந்தகால வன்செயல்களின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த 1030 பேர் கொலை செய்யப்பட்டதாக தெரிவித்த அவர் அதற்குப் பொறுப்பேற்று அரசாங்கம் பதவி விலகி பாராளுமன்ற தேர்தலையும் ஜனாதிபதி தேர்தலையும் உடன் நடாத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

வேறு எவராக இருந்தாலும் இந்நேரம் பதவிவிலகியிருப்பர் எனவும் ஆனால் பிரேமதாசா பதவி விலகுவது சிரமமே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த விவகாரத்தில் இம்மாதம் அரசுக்கு எதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை விவகாரம் சட்டமா அதிபரிடம்

-- ரணில்

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவினால் அரசாங்கம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுப் பற்றி விசாரிக்க தேவைப்படும் அனைத்தும் செய்யப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். சட்டமா அதிபரிடம் இந்த விசாரணை விவகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இது பற்றி விசாரிக்க தலைமைநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் சுதந்திர விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என எதிர்க் கட்சிகள் கேட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## உடுகம்பொல வெளியிட்ட படுகொலை செய்யப்பட்ட சு. க. வினரின் படங்கள்

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களால் படுகொலை செய்யப்பட்ட சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களில் ஒன்பது பேரது புகைப்படங்களை முன்னாள் பொலிஸ் அதிகாரி உடுகம்பொல வெளியிட்டுள்ளார்.

மேலும் தற்போதைய இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஏனஸ்ட் பெரேரா ஒரு லஞ்சப்பேர் வழி என்றும் புலிகளுக்கு ஆயுதம் விற்பனை ஏஜென்சிகள் குறித்து தான் விசாரணை நடத்த முற்பட்டதை பெரேரா தடுத்து விட்டார் என்றும் உடுகம்பொல கூறினார். மேலும் ஆயுதஏஜென்டுகளுக்கும்விஜேரட்னா படு கொலைக்கும் சம்பந்தம் இருப்பதாக உடுகம்பொல சொன்னார்.

## தியாகச்சுடர் அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள்

சங்கானை வட்டவைப் பிரிவில் நிற்சாமம் அம்மன் கோவிலில்இன்று தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணா விரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

அடையாள உண்ணாவிரதம் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை இடம்பெறும். பிற்பகல் 7.00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகும் இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் மகாதேவன் மாஸ்ரர், செல்வன். ஜவான் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெறும் கலைநிகழ்ச்சிகளில் சின்ன மணிகுழுவினரின் வில்லிசைநிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

## சேவை

நோயாளர்நலன்கருதி யாழ். போதனா வைத்தியசாலை நலன்புரிச்சங்கத்தினரால் அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை நலன்புரிச்சங்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

## க.பொ.த. (சா)-90 பரீட்சை முடிவுகள் தாமதமாகலாம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 90 இற்கான பெறுபேறுகள் இரண்டு கிழமைகள் தாமதமாகும் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## ஒரு பொலிஸார் பலி; இராணுவம் காயம்

(காத்தான்குடி)

மட்டக்களப்பு காத்தான்குடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் ஒரு ரிசேவ் பொலிஸ்காரர் கொல்லப்பட்டதுடன் மேலும் தொண்டர் படையைச் சேர்ந்த இராணுவத்தினர் ஒருவர் காயமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாலமுனை முகாமிலிருந்து ஆரையம்பதி நோக்கி ட்ராக்டரில் சென்ற பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்ததைத்தொடர்ந்தே மேற்படி சம்பவம் இடம் பெற்றது.

சம்பவத்தை அடுத்து பாலமுனைச் சந்திக்கு அருகிலுள்ள அரிசி ஆலைக்குள் இருந்தவர்களை இராணுவத்தினர் தாக்கினர்.

இதில் பன்னிரண்டு பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளுடன் போரில் பின்னடைவே அதிகார மாற்றத்திற்கான காரணம்

-இராணுவ அதிகாரி தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான போரில் கடந்த சில மாதங்களாகப் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இப் பின்னடைவுகளினால் ஆயுதப் படையினருக்கு பலத்த சேதமும், இழப்புக்களும் ஏற்பட்டன.

இதனைத் தொடர்ந்தே சகல இராணுவ நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்த கூட்டுப் படைத்தலைமையகத்திடமிருந்த அதிகாரங்கள் முப்படைகளின் தளபதிகளிடமும், பொலிஸ்மா அதிபரிடமும் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

இதேவேளைவிடுதலைப்புலி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

லெப். புலித்தேவன் !



தெல்லிப்பழை வீமன்காமம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நேரடி மோதலில் விழுப்புண் அடைந்து வைத்திய சிகிச்சை பெற்று வந்த லெப். புலித்தேவன் (முருகேசபிள்ளை சிதம்பரேஸ்வரன், வட்டு கிழக்கு, சித்தன்கேணி) என்பவர் நேற்று வீரச்சாவை தழுவிக்கொண்டார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஆறு தமிழர் சுட்டுக் கொலை கிரான்குளத்தில் கோரம்

சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஆறு தமிழர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான் குளத்தில் ரோந்து சென்ற இராணுவ அணியே இவ்வாறான கொடூரச் செயலில் ஈடுபட்டது.

இதன் போது பலியானவர்களது அடையாள அட்டைகள் இராணுவத்தினரால் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என இராணுவ அதிகாரி அறிவித்துள்ளார்.

## குற்றத்தடுப்பு தீவிரம் 10 இளைஞர்கள் கைது

[யாழ்ப்பாணம்]

புது வருடத்தையொட்டி யாழ். நகரில் நாளுக்கு நாள் மக்கள்கூட்டம் அதிகரித்து வருகிறது இதனால் சட்டம் ஒழுங்குகளை கவனிப்பதில் தமிழீழ காவல் துறையினர் தீவிர நடவடிக்கைஎடுத்துவருகின்றனர். நேற்று மட்டும் பெண்களுடன் சேட்டை விட்ட பத்து இளைஞர்கள் காவல்துறையினரால் கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

புது வருடப் பண்டிகைக்காக பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும்யாழ்.நகரப்பகுதிக்குவரும் மக்கள் கூட்டம் தினம் தினம் அதிகரித்து வருகிறது. இம்மக்களின் நலன் கருதி தமிழீழக் காவல் துறையினரது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இவ்வாறான நடவடிக்கைகளின் போது நேற்று மட்டும் பெண்களுடன்சேட்டைவிட்ட சுமார் பத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். (க

## வரி விளம்பரம்

### சோதிடம்

ஜாதகம் எழுத விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயர் வைக்க, எதிர்காலப் பலன றிய வேலணை சோதிடர் சிவராசா 152 B அரசடி றோட், கந்தர்மடம். (2435)

### அன்பளிப்பு

மில்க்வைற்நீலசோப் மேலுறை/மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப் பக்கற் பத்து எம்மிடம் சேர்ப்பித்து அறிவியல் ஏடு ''ஊற்று'' பிரதி ஒன்றை அன்பளிப்பாகப் பெறுங்கள். -மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/4140)

### தவறிவிட்டது

28-03-92 அன்று தும்புருவிலுக்கும், பல்லவராயன்கட்டுக்குமிடையில் பயணப்பொதி (ரவலிங் பாக்) தவறிவிட்டது. இப்பொதியினுள் உடுபுடவைகளும், திருமதி மேரி மெற்றலின் அருளப்பு, பேசாலை என்ற முகவரியுடைய ஆள் அடையாள அட்டையும், அவருடைய கொழும்பிலிருந்து வரும்போது வழங்கப்படும் அனுமதி (சிவப்பு) அட்டை, அத்துடன் இராமலிங்கம், கணேசதாசன் (புத்துவெட்டுவான், கிளிநொச்சி) என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவை அடங்கும்.

இதுபற்றிய விபரம் அறிந்தவர்கள் அல்லது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பத்திரிகைக் காரியாலயத்தில் அல்லது M. R. S போக்குவரத்துச் சேவை, பஸ்நிலையம், கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(சி-4145)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளிவாரிப்பட்டப்படிப்பு கற்கை நெறி

முதற் கலை / முதல் வர்த்தக 1990 / 1991

### வழிப்படுத்தும் பயிற்சி 11

முதற் கலை / முதல் வர்த்தக கற்கை நெறிக்கு பதிவு செய்துள்ள மாணவர்களுக்கு 20 - 04 - 92 தொடக்கம் 30 - 04 - 92 வரை வழிப்படுத்தும் பயிற்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறவுள்ளது இக் கற்கை நெறிகளுக்குப் பதிவு செய்துள்ள மாணவர்களை இப் பயிற்சியில் கலந்து கொள்ளுமாறும். நேர அட்டவணை, பதிவேடு ஆகியவற்றை 20-04-92 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் பெற்றுக் கொள்ளுமாறும் வெளிவாரிப் பட்டப் படிப்பு இணைப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

(சி-4241) - பதிவாளர்

## துப்பாக்கிப் பிரயோகம்

கட்டுவன், வீமன்காமம் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண்களிலிருந்து கடந்த செவ்வாயிரவு தொடர்ச்சியாக ஐம்பது கலிபர் துப்பாக்கிப் பிரயோகம் பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நடத்தப்பட்டுள்ளது.

அதேபோல்கல்முனைப்பகுதியிலும் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையால் மீனவர்கள் கரை திரும்பியதாகத் தெரியவருகின்றது.

## இரண்டாவது பிறந்த தின வாழ்த்து

## செல்வி ஜெனித்தா

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக் கோட்டையைச் சேர்ந்த ஜெயரட்ணம் ஜெயந்தி தம்பதியரின் செல்வப் புதல்வி ஜெனித்தா (கிறிஸ்றலா) இன்று தனது இரண்டாவது பிறந்த தினத்தைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, மாமாமார், அன்ரிமார். மச்சாள்மார், மச்சான்மார் அனைவரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

(சி-4135)

## அன்னை பூபதியின்

### 4 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மங்காத புகழ் விளக்காய் மாந்தருள்-
மாணிக்கமாய்
ஓங்கும் உயர் தியாகத்தால் பாங்குடன்-
நம் நெஞ்சமதில்
நீங்காது நிறைந்திட்ட அன்னையே-
பூபதியே
தூங்காது நம் இளைஞர் தொடர்கின்றார்-
விடுதலைக்காய்
தீங்கேதும் அணுகாது தூயவளே-
இரட்சிப்பாயே!

**கடற்தொழிலாளர் சங்கம்**

**மணற்காடு, கற்கோவளம்**

(2437)

## 30-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
19- 06- 1910

உதிர்வு
13- 03- 1992



**கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாம்பிள்ளை ஆனாப்பிள்ளை (முத்து)**

அன்பின் திருவுருவாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை விட்டுப் பிரிந்த எனது தாயாரின் ஆத்ம சாந்திக்காக 11- 4- 1992 சனிக்கிழமை அன்று புனித மரியன்னை பேராலயத்தில் காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும்
கணவன், மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

59, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
(2427)

தகவல்
மகன் S. அன்ரனி

## நினைவு கூருகின்றோம்...

## 1992. 04. 10

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினரால் காவல் நிலையத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமகன் உட்பட, படுகொலை செய்யப்பட்ட எட்டுத் தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, பெரியபுல்லுமலைப்பகுதியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு, எரித்துக் கொலை செய்யப்பட்ட -

**தயா** (சா. தியாகராசா - இலுப்பையடிச் சேனை, மட்டக்களப்பு)

இதே பகுதியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு அடித்துக் கொலை செய்யப்பட்ட -

**காசன்** (பெ. குமாரவேல் - வேலைத்தோட்டம், பதுளை.)

கடவானையில் எமது முகாமொன்றின்மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப் மணாளன்** (தியாகராசா குகன் - சிப்பித்திடல். தம்பலகாமம், திருக்கோணமலை.)

**ஜானி** (செபஸ்ரியான் ஜெயராசா - சின்ன யாழ்ப்பாணம், வெள்ளைமணல், கிண்ணியா, திருக்கோணமலை.)

**ராஜ்குமார்** (கந்தசாமி சச்சிதானந்தம் ஆலங்கேணி, கிண்ணியா, திருக்கோணமலை.)

**அருச்சுனா** (வைரமுத்து கனகரத்தினம் - ஆலங்கேணி, கிண்ணியா, திருக்கோணமலை.)

வேராவில்லில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**சின்னரவி** (ஆறுமுகம் புவனேஸ்வரன் - மூள்ளி ஒழுங்கை, அரியாலை.)

**கெனடி**

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, தொப்பிக்கல் மலைப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகை நடவடிக்கையினால் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவெய்திய போராளிகளின் புகழுடல்களை மீட்கும் போரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் சங்கர்** (முருகையா சுந்தரலிங்கம் - வாழைச்சேனை, மட்டக்களப்பு.)

**கப்டன் அமுதன்** (கருவல் நவரத்தினம் - கிரான், மட்டக்களப்பு.)

**2-ம் லெப். பாப்பா** (சந்திரன் - கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.)

**2 -ம் லெப் மாவி** (வல்லிபுரம் சிவநோக்கம் - பழுகாமம்.)

**கிரி** (சிவயோகநாதன்)

**அமல்ராஜ்** (மயில்வாகனம் ராஜேந்திரன் - வெல்லாவெளி, மட்டக்களப்பு.)

**செல்வரூபன்** (புண்ணியமூர்த்தி - இலுப்பையடிச்சேனை.)

**நிமால்** (யோகன் - நாவற்குடா, மட்டக்களப்பு.)

**ராவ்** (தம்பிப்பிள்ளை ரவீந்திரநாதன் - முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு.)

**ஜெயவேந்தன்** (மாணிக்கம் மகாலிங்கம் - கொம்மாந்துறை, மட்டக்களப்பு.)

**லெப், ரொமேஸ்** (கந்தையா கறுவல்தம்பி-வந்தாறுமூலை, மட்டக்களப்பு.)

**சாள்ஸ்** (க. பரமநாதன் - தம்பிலுவில், அம்பாறை)

மன்னார், மாந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**நாயகன்** (தட்சணாமூர்த்தி சுகிந்தன்-கன்னங்குடா, மட்டக்களப்பு.)

**விஜயன்** (சின்னத்தம்பி முருகமூர்த்தி - கோயில் போரதீவு, மட்டக்களப்பு

**2-ம் லெப். துரைக்குட்டி** (அடைக்கலம் தொம்பை - கற்கடந்தகுளம், முருங்கன், மன்னார்.)

காரைநகரில் சிறிலங்கா கடற்படை முகாம் இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். ரகுராம்** (பழனிவேல் நந்தவரதன் - குலனையூர், அராலி வடக்கு )

**லெப். குட்டி** (செல்லையா இராசேந்திரன் - நவக்கிரி, புத்தூர்.)

இதே பகுதியில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய -

**நேரு** (பரராஜசிங்கம் குகநாதன் - புத்தூர் கிழக்கு.)


மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட மயிலவெட்டுவானைச் சேர்ந்த தமிழ் இளைஞன், ஐயங்கேணி வாசிகளான 2 இளைஞர்கள் உட்பட 3 தமிழர்கள்.

மற்றும் சுட்டுக் கொல்லப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந் நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4242)




கப்பல் ஓட்டும் கலையில் புகழ்பெற்றவர்கள் வல்வெட்டித்துறை மக்கள். 1937ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவுக்கு ''அன்னபூரணி'' என்னும் பாய்க் கப்பலை ஓட்டிச்சென்ற வல்வை மக்களின் திறமையும் துணிச்சலும் எங்களது வரலாற்றில் நெஞ்சை நிமிர்த்திப் பெருமைப் படக்கூடிக் விடயமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கடற்பகுதியில் வீரச் சாவைச் சந்தித்தவர்களில் (குறிப்பாகப் படகோட்டிகள்) பெரும்பாலானோர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களே. ஆக்கிரமிப்புப் படைகளுடனான போரில் காயமடைந்த போராளிகளைக் காக்கும் பொருட்டும், இராணுவ தளபாட விநியோகத்திற்கும் கடற்பிரயாணங்களின் முக்கியத்துவம் எத்தகையது என்பது தமிழீழ மக்கள் அனைவருக்கும் தெரியும். திடீரென கடற்படையினர் எதிர்ப்பட்டால் மறைந்து கொள்ளவோ உருமறைப்புச் செய்யவோ முடியாத வகையில் போராளிகளுக்குப் பாதகமான முறையிலேயே நிலைமை இருக்கும். எனவே இப்பகுதிக்குள் சண்டித்தனத்துடன் சிறிலங்காவின் கடற்படைப் படகுகள் உறுமித் திரியும். இதற்குள்ளும் நம்பிக்கை, இலட்சியப் பிடிப்பு என்பவற்றை மட்டுமே பலமாகக் கொண்டு இயங்கி வருபவர்கள்தான் கடற்புலிகள். எதிரிகளின் கடற்பகுதியை மீட்டெடுக்க உருவாக்கப்பட்ட இந்தக் கடற்புலிகள் அமைப்பில் தான் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிதம்பரமும் விடுதலைப் பணியாற்றிக் கொண்டிருந்தான்.

1972 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி பெரிய தம்பி - சற்குணதேவி தம்பதியினரின் ஆறாவது மகனாகப் பிறந்தவன் இவன். இவனுக்கு சந்திரன் என்று பெயரிட்டனர் அவர்கள். தற்போது விமானக் குண்டு வீச்சினால் சிதைவுற்றிருக்கும் வல்வெட்டித்துறை சிவகுரு மகாவித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பு வரை கல்விகற்ற இவன் குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக படிப்பை நிறுத்திக் கடற்றொழிலில் ஈடுபட்டான். அக்கால கட்டத்தில் இன்று மனித உரிமை பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருக்கும் அத்துலத்முதலி கடல் பாதுகாப்புவலயச் சட்டத்தைதீவிரமாகஅமுல்படுத்திக்கொண்டிருந்தார். வயிற்றுப் பிழைப்புக்காக கடற்றொழிலில் ஈடுபடும் நேரத்தில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்படும் மீனவரை அவரது 'லங்காபுவத்' பயங்கரவாதிகளெனத் தீர்ப்பளிக்கும். இக்காலத்தில் பயணிகள் படகு ஒன்றின் மீது கடற்படையினர்மேற்கொண்ட படுகொலை மிகப்பயங்கரமானது. எனினும் குடும்பத்தின் நிலை கருதி அபாயத்தின் மத்தியில் இரவில் மட்டும் தொழில் செய்வர் கடற்றொழிலாளர்கள். அவர்களில் ஒருவனாக இருந்தவன் சந்திரன்.

இக்கால கட்டத்தில் ஒரு பௌர்ணமி இரவு- மீன் பிடித்துக் கொண்டிருந்த கட்டுமரங்களை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தது சிறிலங்கா கடற்படையினரின் படகு ஒன்று, அது நெருங்க நெருங்க கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களை மரணபயம் ஆட்கொண்டது. அவர்கள் கட்டுமரங்களை கரையை நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தனர். எவ்வளவுதான்விரைந்து வலித்தாலும் தப்பமுடியாத சூழ்நிலை கடற்படையினரின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது. ஆனாலும் வலித்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில்அந்த கடற்படைப்படகு இவர்களை அண்மித்துவிட்டது. அவர்களது குரல் உரத்துக் கேட்டது இவனுக்கு-''கொட்டியா''. தன்னுடன் கட்டுமரத்தில் தொழில் செய்துகொண்டிருந்த சந்திரன் தன்னுடனிருந்த வயோதிபரை நிமிர்ந்து பார்த்தான் அந்தப் பயங்கரமான சூழ்நிலையிலும் அவனது மனதில் ஒரு கேள்வி பிறந்தது. ''இவருமா?''

இவர்கள் ஏதும் பதில் சொல்லும் முன்னரே கடற்படையினரின் முறுக்குக் கயிறுகள் இவன் முதுகில் வலியுடன் வரிகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அந்த வரிகளே எதிர்காலத்தில் ஒரு வரிப்புலியை-அதுவும் கரும்புலியை உருவாக்கப்போகின்றது என்பது தெரியாமல் அடித்துக் கொண்டிருந்தனர் அவர்கள். கடலில் ஒரு புலி பிறப்பெடுத்துக் கொண்டிருந்தான். அவனுள் இயல்பாகவே இருந்த விடுதலை உணர்வு அக்கால கட்டத்தில் அவனில் இருந்த குடும்பத்தின் வறுமை நிலைமையைப் பற்றிய உணர்வை விட மேலோங்குவதற்கு இச்சம்பவம் பிள்ளையார் சுழி போட்டு வைத்தது.

பின்னர் இந்திய இராணுவம் வல்வெட்டித் துறையில் நிகழ்த்திய கோரத் தாண்டவம் இவன் ஒரு முழு நேரப் போராளியாக உருவாகும் நாளை விரைவுபடுத்தியது. பின்னாளில் உறுப்பினர் விபரம் என்ற சுய விபரக் கோவையில் இயக்கத்தில் இணைந்த திகதி என்று குறிப்பிடப்பட்ட இடத்தில் 1989 ஆகஸ்ட் 12 என குறிப்பிட்டான் இவன்.

இந்தியப் படையினர் எமது மண்ணை விட்டகன்றதன் பின்னர் சிறிது கால இடைவெளியில் சிறிலங்காப் படையினருடனான போர்ஆரம்பித்திருந்தது. இவன் பலாலி முகாம் பகுதியில்காவல்கடமையிலீசடுபட்டான். இராணுவத்தை வெளியேறவிடாது தடுக்கும் தாக்குதல்களில் பலவற்றில் பங்கு பற்றினான். பின்னர் இவன் வடமராட்சிப் பகுதியில் கடமையாற்ற அழைக்கப்பட்டான். அப்போதெல்லாம் எமது கடலில் சுதந்திரமாக-சண்டித்தனமான முறையில் இரைச்சலுடன் சென்று கொண்டிருக்கும் கடற்படைப் படகுகளைக் காணும்போது இவனுக்கு பழைய நினைவுகளெல்லாம் எழும். கடற்படையினருக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களில் பங்கு பற்ற கிடைத்த சந்தர்ப்பங்கள் இவனது ஆத்திரத்தைப் பொறுத்தவரை யானைப் பசிக்கு சோளப்பொரி போலவே இருந்தன. மன நிறைவானதாக்குதலுக்கு சந்தர்ப்பம் கிடைக்காதா என ஏங்கிக் கொண்டிருந்தான்.

1991 ஜனவரி 23 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் பருத்தித்துறை கடல் பகுதியில் சிறிலங்கா கடற்படையினருக்கு எதிரான தாக்குதல் ஒன்றுக்காக சில முன் முயற்சிகளை மேற்கொண்டுவிட்டு கரையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர் சிதம்பரமும் அவனது நண்பர்களும். அவர்களை நோக்கி விரைந்து வந்தது கடற்படைக் கப்பலொன்று. இவர்களருகே வந்ததும் கடலுக்கு வந்த காரணத்தையறிய அதட்டினார்கள் அவர்கள். மீன் பிடிக்க வந்ததாக பதிலளித்தான் சிதம்பரம். சுற்றுப்



கரும்புலி
கப்டன் சிதம்பரம்

பகுதியெங்கும் மீன்பிடிப்படகுகள் நின்று கொண்டிருந்தன. இவனது தோற்றம் அவர்களுக்கு சந்தேகத்தை உண்டாக்கவில்லை. அவன் அப்பாவிப் பொதுமகனாக இருந்த போது அதை நம்ப மறுத்து அவனை அடித்த கடற்படையினர் அவன் போராளியாக அதுவும் அவர்களுக்கெதிரான தாக்குதல்களுக்கான தயாரிப்புக்குச் செல்கையில் அவன் பொதுமகனாக இருக்கலாம் என கருதி அங்கிருந்து விலகிச் சென்றனர்.

1991ம் ஆண்டு மார்ச் 12-ம் திகதி நண்பகல் 12 மணி-மீண்டும் அதே கடல் பகுதியில் சிறிலங்காவின் கடற்படையினரின் விசைப்படகொன்று சிதம்பரமும் அவனது நண்பர்களும் சென்று கொண்டிருந்த சிறிய படகொன்றை துரத்திக் கொண்டுவந்து கொண்டிருந்தது. அதுவரை அமைதியாக அப்பாவிபோல் செயல்பட்டுக் கொண்டிருந்த சிதம்பரம், சுமார் 150யார் தூரத்தில் அவ்விசைப்படகு வந்ததும் தன்னிடமிருந்த எஸ்.எல்.ஆர். துப்பாக்கியினால் கடற்படையினர் மீது தாக்குதல் தொடுத்தான். அவர்களிடமோ அதி நவீன ஆயுதங்கள்-தாராளமான ரவைகள். இவர்களிடமோ ஒரே ஒரு எஸ்.எல்.ஆர். அதிசயிக்கும் விதமாக அந்த கடற்சண்டையில் சிதம்பரத்துக்கோ அவனது நண்பர்களுக்கோ சேதமெதுவும் ஏற்படவில்லை. சிறிலங்கா கடற்படையில் மூவர் காயமடைந்தனர். படைபலம் பெரிதல்ல மனோ பலம்தான் பெரிது என்பதை பட்டப்பகலில் நிகழ்ந்த அந்தக் கடற்சண்டை அவர்களுக்கு உணர்த்தியது.

என்னதான் சண்டையென்றாலும்- கரும்புலியாகப் போகும் சந்தர்ப்பம்-அதுவும் தான் நேசிக்கும் கடற் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் கடற்படைக் கப்பலை அழிக்கும் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக அவன் உள்ளத்தில் கொழுந்து விட்டுக் கொண்டிருந்த இலட்சியம் நிறைவேறுவதற்கும் ஒரு நாள் கிடைத்தது. 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் இப்பணியை மேற்கொள்ளும் வாய்ப்பு இவனுக்கும் இவனது நண்பன் ஜெயந்தனுக்கும் கிடைத்தது. வல்வெட்டித்துறையிலிருந்து கடற்படை கப்பல் மீதான தாக்குதலுக்கு செல்லும்மூன்றாவது கரும்புலியான இவனும் ஜெயந்தனும் வெடி மருந்து நிரம்பிய படகில் சென்று சிறிலங்கா கடற்படையினரின் தாய்க்கப்பலொன்றுடன் மோதினர். அதிலிருந்த பல சிறிலங்கா கடற்படையினர் மாண்டனர். அவன் நேசித்த - அவன் தொழில் செய்த தமிழீழக்கடல் அவனதும்,ஜெயந்தனதும்சதைகளை உள்வாங்கிக் கொண்டது. அன்று நொருங்கியது சிறிலங்கா கடற்படை கப்பல் மட்டுமல்ல-படைப்பலத்தால் இக் கடற்பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துவிடலாம் என்று ஆக்கிரமிப்பாளர்களின் கனவுகள் - திமிர் எல்லாமேதான்.

இன்று எமது மண்ணில் கடற்புலிகள் அமைப்பு வளர்ச்சியடைந்து விட்டது. இவனைப் போன்ற மாவீரர்களின் உழைப்பினாலும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இருதயநோய்க்குரிய காரணிகளும் குறைப்பதற்கு சில ஆலோசனைகளும்

உலகில் இன்றும் அதிகளவில் இறப்பதற்கு காரணமான நோய் இருதய நோயாகும். குறிப்பாக ஸ்கொட்லண்ட், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இருதநோயினால் ஏற்படுகின்ற இறப்பு வீதம் மிகவும் அதிகமாகும்.

மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கு இருதயம் மிகவும் அத்தியாவசியமான உறுப்பாகும். இதுசராசரியாக நிமிடமொன்றுக்கு எழுபத்திரண்டு முறை துடித்து, உடலின் சகல உறுப்புக்களுக்கும் இரத்தத்தை வழங்குவதன் மூலம் உயிர் வாழ்க்கையைப் பேணுகிறது.

## மருத்துவம்

இருதயநோய் பொதுவாக நாற்பத்தைந்து வயதுக்கு மேலேயே ஏற்படுகிறது. இதற்குரிய காரணிகளைப் பார்த்தால், உடலில் கொழுப்புச் சத்து குறிப்பாக கொலஸ்ட்ரோல்' (CHOLESTEROL) அதிகரிக்கும்போது சிறிய இரத்தக் குழாய்களில், உதாரணமாக இருதயத்திற்கு இரத்தம் வழங்கும் 'கொரோனரி' (CORONARY ARTERIES) குருதிக்குழாய்களில் படிகிறது. அதாவது தண்ணீர்க்குழாய்களில் கல்சியம் படிவது போல் இது படிப்படியாக அதிகரித்து இறுதியில் குருதிக்குழாயின்விட்டம் மூடப்படும்போது, குருதி யோட்டம் முற்றாகத்தடைப்படுகிறது. இதுவே மாரடைப்பு எனப்படுகிறது. இப்படியான. 'கொலஸ்ட்ரோல்' முட்டையின் மஞ்சள் கரு, கொழுப்புள்ள இறைச்சி, பட்டர், நெய், நண்டு, இறால், தேங்காய், தேங்காய் எண்ணெய் போன்றவற்றில் செறிந்து காணப்படுகிறது. எனவே இவற்றை அடிக்கடி அதிகளவில் உண்பவர்களுக்கு இரத்தத்தில் கொலஸ்ட்ரோலின் அளவு அதிகரித்துக் காணப்படும். எனவே நாற்பது வயதிற்குப் பிறகு இவற்றை அடிக்கடி உண்பதைத் தவிர்த்துக்கொள்ளுதல் நல்லது.

அடுத்ததாக, புகைபிடித்தல், குறிப்பாக சிகரட், நாளொன்றுக்கு பத்துக்கு மேல் பத்து வருடங்களுக்கு மேல் குடிப்பவர்களுக்கு, அவருடைய சிறிய குருதிக் குழாய்களில் சுருக்கம் ஏற்படுவதுடன், "காபன் மொனோ ஒக்சைட்டு என்கிற நச்சுவாயுவினால் குருதி உறைதலும் ஏற்படுகிறது. இதனால் திடீரென மாரடைப்பு ஏற்படும்.

மூன்றாவதாக உடலில் வேறுவியாதிகள் இருக்கும் போதும் நாளடைவில் அவற்றினால் குருதிக் குழாய்கள் பாதிக்கப்பட்டு இருதயம் பலவீனமடைந்து ஆபத்தில் முடியும். உதாரணமாக உடலில் உயர் இரத்த அழுத்தம் 'டயபிற்றீஸ்' போன்ற வியாதிகள் நாளடைவில் படிப்படியாக பிரச்சினைகளை ஏற்படுத்தியே தீரும். எனவே இப்படியான வியாதியுடையவர்கள் தமக்குரிய நோய்களின் நீண்டகால ஆபத்துக்களை உணர்ந்து ஒழுங்காக தமக்குரிய மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு அதற்குரிய சிகிச்சையையும் மருந்துகளையும் பெற்றுக் கொள்வதால் இதனால் ஏற்படும் பக்கவிளைவுகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம்.

மேலும், உடல்பருமன் அதிகரித்தவர்கள் உடலுழைப்பு அல்லது உடற்பயிற்சி செய்யாமல் இருந்த இடத்தில் இருந்தே வேலை செய்பவர்களுக்கும் இருதயநோய் வெகு விரைவில் ஏற்படும் ஆபத்திருக்கிறது. சத்துணவு குறைந்து இரத்தத்தில் இரத்தச்சோகை ஏற்படும் போதும், இதற்கு சிகிச்சை உரிய நேரத்தில் பெறப்படா விட்டால் நீண்ட காலத்தில் இருதயநோய் ஏற்படும் ஆபத்து அதிகரித்துக் காணப்படுகிறது. சிலருடைய குடும்பத்தில் பரம்பரையாக இந்த நோய் காணப்படும். இதற்கு திருப்திகரமான சிகிச்சை எதுவும் இடையாது. ஏனையவர்கள் சீரான மருத்துவ பரிசோதனை மூலம் ஓரளவுக்கு தமது ஆபத்தைக் குறைத்துக் கொள்ளலாம்

மாறன்

## சிறுகதை

# செவ்வரத்தம் பூ

சிகப்பி என்று அழைக்கும் படியான நிறம், மிகமெலிந்த உடல்வாகு, எடுப்பான மூக்கோடு கூடிய முகம்! செவ்வந்தி தொய்வுநோயால் உள்வளைந்து .. உருவத்தில் ஒரு மூதுமை நிழல் தெரியத்தோற்றம் தருவாள்.

சுந்தரம் வாத்தியாருக்கும், செல்லம்மா அம்மையாருக்கும் அவள் ஒரேமகள். அவர்களின் தோளில் வீற்றிருக்கும் செவ்வந்தி என்ற சுமையை இறக்கி வைக்க முடியாது இன்னல் பட்டபடி வாழ்ந்தார்கள் இவர்கள்.

சகமனிதர்களின் மன உணர்வுகளை மதிப்பவளாகவும் - நியாயம் நிறைந்த உணர்வுகள் சமூகத்தால் புறக்கணிக்கப் படும்போது அதற்காக கொதிப்பவளாகவும் .. மன உளைச்சல் அடைபவளாகவும், இதற்காக இருமி இருமி இழுப்பவளாகவும் செவ்வந்தி இருப்பாள்.

சந்தைக்குப்போன செல்லம்மாவோடு ஒரு சின்னப் புலிக்குட்டியும் வந்து முற்றத்தில் நிற்கிறது. பதினைந்து வயதுக்குமேல் போகாத அந்தப் போராளிச் சிறுவனை சற்றுவியப்போடு செவ்வந்தி பார்க்கிறாள், மாமரத்துக்குக் கீழ் சயிக்கிலை சாத்தாது பிடித்தபடி அவன் நிற்கிறான்.

'இவர் பிள்ளை உதிலை எங்கடை பிரக்கிறாசியார் வீட்டு காம்பிலைதான் இருக்கிறாராம். இவருக்கு ஒரு மாலை வேணுமாம்... கட்டிக்குடன் பிள்ளை' என்று கூறியபடி செல்லம்மா மகளை நெருங்கினார்.

பக்கத்தில் இருக்கும் அம்மன் கோயிலுக்கு மாலைகட்டிக் கொடுக்கும் செவ்வந்தி, மாலை கட்டும் துறையில் அந்த அயலில் பிரபல்யமாகியிருந்தாள்.

'ஓம்!' என்று அவள் ஒப்புக்கொண்டதும் அந்த சிறிய போராளியின் சிவந்த கன்னத்தில் சிரிப்பொன்று வந்து போகின்றது.

'எவளவு நேரம் செல்லும்?' என்று துடுக்குத்தனத்தோடு அவன் கேட்கிறான்.

அவசரம் இழையோடி அந்தக்கேள்வியை உணர்ந்தவளாக 'ஒரு அரை மணித்தியாலம் 'என்கிறாள் செவ்வந்தி.

சிறிய வெள்ளை நெற்றியின் கீழ் இருக்கும் அடர்ந்த கரும் புருவங்கள் மேலெழுந்து சுருங்க, இடதுகையை சற்றுத் தூக்கி மணிக்கூட்டில் நேரத்தை மட்டிட்டபின், சயிக்கிலைத்திருப்பி... தகரப்படலையைத் திறந்தபடி அவன் வெளிப்பட்டு, வேகமாக வீதியால் விரைகிறான்.

எழுதியவர்: ந. கிருஷ்ணசிங்கம்

'வாறன் !' என்று அவன் விடை பெற்ற தொனி சில வினாடிகள் செவ்வந்தியின் காதுகளில் ஒலித்தன. அவனின் உருவம்... அங்க அசைவு அத்தனையையும் அவள் தன்நெஞ்சில் பதித்துக்கொண்டாள்.

''எவ்வளவு சின்னப்பெடியன் ..'' என்று வாய்விட்டு அவள் கூறியதைக் கேட்ட தாயார் செல்லம்மா ''கோதாரி போவாற்றை பொம்பராலை எத்தினை போட்டுதுகள்'' என்றபடி ஆத்திரம் தீர தலையை ஆட்டியபடி மீனை அறுக்கின்றார்.

நித்திய கல்யாணி பூக்களை பிடுங்கி பெட்டி நிறைய வைத்தபடி; பின் விறாந்தைத் தூணோடு சாய்ந்திருந்து செவ்வந்தி மாலை தொடுக்கத் தொடங்கினாள். இடைக்கிடை தேயிலைக் குரோட்டன் இலைகளையும் .. மஞ்சள் நிறக் கனகாம்பர மலர்களையும் சேர்த்து; மேலதிக அழகு செய்து அவள் தனது கைவண்ணத்தைக் காட்டுகிறாள்.

தகரப்படலையின் ஓசையைத் தொடர்ந்து . முற்றத்தில் சைக்கிள் மணி முழங்கி ஓய்கின்றது.

''பிள்ளை பெடியன் வந்திட்டுது '' என்று அவசரப்பட்டவராக செல்லம்மா மகளை நெருங்கி வந்து கூறுகிறார்.

''இவையள் இப்பிடித்தான் அவசரக் குடுக்கையள் ..'' என்று தனக்குள் கூறியவளாக . கைகளை வேகமாக்கியபடி வேலையைச் செவ்வந்தி தொடர்கின்றாள். அவளின் நெஞ்சுக்குள் தொய்வு நோயின இழுவை சற்றுத் தலைதூக்குவது கேட்கின்றது.

சிலவினாடிகளில் செல்லம்மாவுக்கும், போராளிச் சிறுவனுக்கும் உறவு முறை பூக்கிறது! ''மகன்... மகன் !'' என்று அவரும், '' அம்மா .. அம்மா!'' என்று அவனும் நெருக்கமாக உரையாடுவது கேட்கிறது.

''அவனின் பெயர் பரணி என்றும்; ஊர்ஓமந்தை என்றும் அவர்களின் உரையடாலால் செவ்வந்தி அறிந்து கொள்ளுகின்றாள். சிறுவன் முன் விறாந்தையில் வீற்றிருக்கும் பின்தோற்றமும் அவளுக்கு தெரிகின்றது.

'' பொடியைக் கொண்டு போப்பே ினம்... கெதியா மாலையைக் கொண்டு போய் போடவேணும்...'' அந்த துடுக்குத்தனமான குரல் அவசரத்தோடு கேட்கிறது.

இதைத் தொடர்ந்து இறந்த போராளி பற்றியும், எங்கே ரணம் சம்பவித்தது என்பது பற்றியும் செல்லம்மாவின் கேள்விகள் திரும்ப; சுருக்கமாக ஏதோ கூறிவிட்டு அவன் எழுந்து நிற்பதைக் கண்ட செவ்வந்தி; தனது மாலைக்கு குஞ்சத்தையும் தொடுத்துவிட்டு; அதைக் கொண்டுவந்து நீட்டுகிறாள்.

கையில் பெற்ற மாலையை வைத்தகண் வாங்காது ஒரு கணம்பரணி பார்க்கிறான். சட்டென்று தனது நெஞ்சில் அதைப் பிடித்தபடி ''அக்கா எப்பிடி என க்கிருக்கு? ...'' என்று அவன் கேட்கவும் ''வெருளி . !'' என்று கத்தியபடி செவ்வந்தி அவனிடமிருந்து மாலையை மீண்டும் பறித்துக் கொள்ளுகின்றாள்.

தொடராக இருமலோடு இளைப்பும் எழ, ஒரு பொலித்தீன் உறையைத் தேடி எடுத்து அதற்குள் மாலையைத் திணித்து விட்டு அவள் அதை பரிவோடு நீட்ட..., சிறிய வீரன் சிரித்தபடி பெற்றுக்கொள்கிறான்.

சயிக்கிள் ஓசையும், தகரப்படலை ஒலியும் மறைந்துவிட, ''சரி வாறன் ..'' என்ற அவனின் விடைபெற்ற குரல் மட்டும் வீடெங்கும் நிறைந்து கொண்டதான அபூர்வ உணர்வொன்று செவ்வந்தியைப் பற்றி நின்றது.

★ ★

எங்கேயோ பிறந்து, ஒரு உயரிய இலட்சியத்துக்காக— தங்களை முழுமையாக அர்ப்பணித்து, காட்டிலும் -மேட்டிலும், வயல் வெளிகளிலும் . பனை வடலிகளுக்குள்ளேயும் செத்து விழும் போராளிகளை இரவு பகல் எந்நேரமும் செவ்வந்தி எண்ணுவாள்! உணர்ச்சிவசப் படும் கதைகளை பரணி வந்து அவளுக்குச் சொல்லுவான்

''அக்கா .! இன்டைக்கு ரெண்டு வேணும் '' என்றும் ''நாலு வேணுமென்றும்'' மாலை ஓடர்களை அவன் வந்து கொடுப்பான். மளமளவென்று அவள் கட்டுவாள் தனது முகமுக்கு வரும் மரணித்த மாவீரர்களின் உடலுக்கு மாலையிட்டு மரியாதை செய்யும் பணியை பரணி தனதுபொறுப்பாகவே ஏற்றிருந்தான்.

ஆற்றில் தவழ்ந்து - நெற் கதிர்களைத்தடவி - பச்சைப் பசுமையோடு தவழ்ந்து வரும் தென்றலை அனுபவிப்பது போன்று பரணியின் உறவை அந்த வீட்டில் எல்லோரும் விரும்பினர். சுடுமூஞ்சியான சுந்தரம் வாத்தியார் கூட ''ஏன் இவன்தம்பியை...காணஇல்லை? ...'' என்று கரிசனையோடு விசாரிக்கும் அளவுக்கு அவன் வீட்டுப்பிள்ளையாகி நின்றான்.

ஒருநாள் பரணிக்குப் பதிலாக ''மாலை கட்டும் அக்காவின் வீடு எது ?'' என்று விசாரித்தபடி இன்னுமொரு சிறிய போராளி அங்கு வந்து நின்றான்.

''இதுதான் !... ஏன் பரணி எங்கை போட்டான் ? .. நாலைஞ்சுநாளா-காணன் ? ... ஏதும் காச்சல் கறுப்பே ? ...'' என்ற செவ்வந்தியின் தொடர் கேள்விகளுக்குப் பதிலொன்றும் கூறாமல் இறுகிய முகத்தோடு அந்த இளைய போராளி நின்றான்.

'' என்ன .. மாலை ஏதும் கட்ட வேணுமே?'' மீண்டும் அவளே கேட்டாள்.

''ஓமக்கா... மணலாற்றிலை இருந்து .. பரணியின்ரை பொடிதான் வந்திருக்கு'' அந்தச் சிறுவனின் குரல் அதற்கு மேல் அவளுக்குக் கேட்கவில்லை. நெஞ்சைப் பிடித்தபடி படலையடியில் குந்தினாள் அவள்!!!

வீதியிலே வாலிபர் குழுவொன்று தமது கல்லூரியின் கிரிக்கெட் அணிக்கு ஆதரவு தெரிவித்து தகரங்களிலே தட்டி . ஆடிப்பாடி அவளைக் கடந்து செல்வதைச் செவ்வந்தி தலைதூக்கிப் பார்க்கிறாள்! கண்ணீர் வலை படிந்த அவளின் விழிகளிலிருந்து இரத்தமும் சேர்ந்து வடிகின்றன.

கொதிநிலை அடைந்த கோலத்தில் எழுந்தவள் ''படார்...! என்ற ஒலியுடன் தகரப்படலை அடிபட்டு ஓய .., உள்ளே வருகின்றாள். இருமலோ .. இழுப்போ இளைப்போ எதுவும் அவளை ஆட்கொண்டு தடுக்கவில்லை! தன்னை மறந்த தவிப்போடு அவளின் கைகள் பூக்களைப் பிடுங்குகின்றன.

கடகம் நிறைந்த செவ்வரத்தம் பூக்கள் அவளின் கைவண்ணத்துக்காகக் காத்துக் கிடக்கின்றன.

(முற்றும்)

## ஆழ வீழ்ந்த சுவடுகள்...

மட்டு மா மண்ணும்
மாமாங்க வீதியும்
மகுடம் சூடின ! -

மேலெழுந்து மிளிர்ந்ததொரு
மாமனிதப் பேரொளி !
இதற்காகத் தானே
ஆங்கு
மண் மீது சாய்ந்ததொரு
மனித உடலம் !

சித்திரைப் பத்தொன்பது
முத்திரை பதித்தது ! -
கிராணம் கூடவே
கிரீடம் அணிந்தது !

பூபதியார் போர்வழியாற்
பகர்ந்த வரிகள் வைரங்கள்
பூவல்ல பெண்ணென்பாள்
புயலே இனியென்று -
மண் மான அன்னையிடம்
தன்மானத் தமிழன்னை
புது அர்த்தக் கொடை பெற்றாள் ;

அமைதிவழித் தடமெடுத்த
அன்னையவர் போர்ப்பாதை
ஆனாலும்-
அணுகுண்டும் தோற்றதுவே ! -
வீணர்களின் வீறாப்பு
குடைசாய்ந்து சிதறியதே ! -

''அமைதி காக்க வந்ததல்ல
ஆக்கிரமிக்க வந்த படை ! -''
அன்னையார் ஈகம்
அம்பலத்தில் வீசியதே !

எத்தர்கள் அதிர்ந்தனரே !
அழுந்தத் துடைத்தனரே முகங்களை !
எத்தனை முயன்றும் போக மறுத்ததுவே
பூசிய கரி !

''ஆக்கிரமிக்க வந்த படை -
ஆப்பிழுத்த குரங்குப்படை'' ! -
அனைத்துலகும் சிரித்ததுவே !

எல்லாமும் சுவடுகளே !
எல்லாமுமே
ஈழத்தாய் இதயத்தில்
ஆழ வீழ்ந்த சுவடுகளே !

செ. போ. சிவனேஷ்

## புலிகளை இந்தியா

நியாயபூர்வ உரிமைக்கெதிராக சிங்கள அரசு பெரும் ஒடுக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ள சூழலில் புலிகளைத் தடைசெய்வதென்பது சிங்கள அரசின் ஒடுக்கு முறைகளை மேலும் அங்கீகரிப்பதுடன் நிரந்தரமாகத் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து இந்தியா அந்நியப்படவுமே அது உதவும்.

ஒருபோதும் சிங்கள அரசு இந்தியாவை நட்புச் சக்தியாகக் கொள்ளப் போவதில்லை. புலிகளைத் தடை செய்வதன் மூலம் இலங்கை அரசுக்கு இந்தியா உதவுமேயானால் இந்தியாவை எதிர்ப்பதற்கான வல்லமையை எதிர்காலத்தில் சிங்கள அரசுக்கு அது கொடுப்பதாகவுமே அமையும். இறுதியில் இலங்கைத் தீவிலுள்ள இரு தரப்பு மக்கள் மத்தியிலிருந்தும் இந்தியா நிரந்தரமாக அந்நியப்படுவதாகவே அமையும்.

உணர்ச்சிவசத்திலும், பழிவாங்கும் சுபாவத்திலிருந்தும் அரசியலைப் பார்க்காது, கடந்த காலத்துத் தவறுகளுடன் மீண்டும் ஒரு பெருந்தவறை இந்தியா இழைக்காது புதிய யதார்த்தத்திற்கும், புதிய சூழலுக்கும் ஏற்ப சிந்திப்பது தான் இந்தியாவிற்கு உகந்ததாய் அமையுமே தவிர புலிகளைத் தடைசெய்வதல்ல. தர்க்க பூர்வமாகப் பார்த்தாய் புலிகளைத் தோற்கடிப்பதென்பது ஈழத்தமிழரைத் தோற்கடிப்பதற்குச் சமன். விவாதத்தின் பொருட்டு தமிழர் தோற்கடிக்கப்பட்டதாகக் கொள்வோமானால் அதனால் இந்தியாவிற்கு என்ன லாபம்? அது இந்தியாவிற்கு நிரந்தர நட்டமாகவும், சிங்கள அரசுக்கு நிரந்தரஇலாபமாகவுமே முடியும்.

யாழ். மண்ணில் இந்திய இராணுவத்தின் கசப்பான படிப்பனையையும், இராணுவ அதிகாரிகளின் நல்ல வார்த்தைகளைக் கருத்தில் எடுத்தும், 'றோ'வின் பட்டறிவையும் அதன் மூலம் அவர்கள் இப்போது கூறுவதுபோல புலிகளைத் தடை செய்யக்கூடாது என்ற அபிப்பிராயத்தைக்கருத்தில் எடுத்தும் இந்தியஇராஜதந்திரிகளும் கொள்கை வகுப்பாளர்களும் சிந்திப்பார்களேயானால் அது புத்திசாலித்தனமாய் அமையும்.' 'றோ'வின் இந்த அபிப்பிராயம் அதற்கு நல்லனுபவம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது.

சுதந்திர இந்தியா மிகப் பெரும் விலை கொடுத்துப் பாடம் படித்த இடம் தமிழீழக் களமாகும். எல்லா வகையிலும் தன்னை உணர்ந்துகொள்ள இந்தியாவிற்கு முழுவாய்ப்பையும் அளித்த களம் ஈழம் தான். இந்தியா உண்மையிற் கற்றுக் கொண்டதா? இல்லையா? என்பதை அது புலிகளைத் தடைசெய்யப் போகின்றதா? இல்லையா? என்ற தீர்மானம் தான் வெளிக்காட்டும்

## விழுதுகள்

தியாகத்தினாலும் அதன் பெருமை உலகுக்கு உணர்த்தப்படுகிறது. கடற்புலிகளின் சாதனைகளைக் கண்டு ஏனைய தமிழீழ மக்களைப் போலவே பெருமை கொள்கின்றனர் வல்வெட்டித்துறை மக்கள்-அந்த மண்ணில்''எங்களின் கடலிலே எவன் எம்மைத் தடுப்பவன்?'' என்ற பாடல் ஓங்கி ஒலிக்கிறது.

- தம்பி

# புலிகளை இந்தியா தடைசெய்யுமாயின் அது தற்கொலைக்கு ஒப்பானது

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மரணத்தின் பெயரால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது பற்றி இந்திய மத்திய அரசு ஆலோசித்து வருகின்றது ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது புத்திசாலித்தனம் அற்ற செயல் என ''றோ'' அபிப்பிராயப்படுகின்றது.

இலங்கை சம்பந்தமான விவகாரத்தில் இந்தியா தரப்பில் நான்கு சக்திகள் சம்பந்தப்பட்டன. அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள், ''றோ'' இந்திய இராணுவம் ஆகியனவே அச்சக்திகளாகும் இந்நான்கிலும் ''றோ', எனப்படும் இந்திய உளவுப்படை தான் தீர்மானங்களுக்கான மையப் புள்ளியாய் அமைந்தது.

களத்தில் நின்ற இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் புலிகளுடனான யுத்தத்திற்குப் பச்சை விளக்குக் காட்டவில்லை ''றோ''வும் கூட்டுப் படைத் தளபதி சுந்தர்ஜியும் புலிகளுடனான யுத்தத்தை ஓர் அற்ப விடயமாக நினைந்து ஆரம்பித்தனர். விரல் விட்டு எண்ணக்கூடிய சில நாட்களுக்குள் யுத்தம் முடிந்து விடுமென ''றோ''வும் சுந்தர்ஜியும் நம்பினர். யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்திலும் சரி, இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறிய பின்பும்சரி களத்தில் நின்ற இந்திய இராணுவ அதிகாரிகள் வெளியிட்ட பத்திரிகைக் கருத்துக்களும் அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்து கொண்டிருக்கும் நூல்களும் புலிகளுடனான யுத்தம் அநாவசியமானது என்ற இராணுவத்தின் கருத்துக்களை தெளிவாக்கி வருகின்றன.

''நாங்கள் ''றோ'' வினால் தவறாக வழிநடத்தப்பட்டோம்'' என்ற தளபதி திபேந்திரசிங்கின் கருத்து இங்கு பெரிதும் கவனத்திற்கு உரியது. அதேவேளை ''றோ'' தமக்குச் சரியான தகவல்களை வழங்கியிருக்கவில்லை என்று பிற்காலத்தில் சுந்தர்ஜி குறிப்பிட்டமையும் கவனிக்கத்தக்கது

''றோ'' வுக்கு ஏற்ற இராஜதந்திரியாக டிக்சிற் கிடைத்தார், இதனால் ''றோ''வின் தீர்மானங்களே இராஜதந்திர வட்டாரத்தின் தீர்மானமாகியது ராஜீவும் ''றோ'' வின் மீதே முழு நம்பிக்கை வைத்திருந்தார். இதனால் 'றோ' வின் தீர்மானங்களை ராஜீவ் காந்தி கட்டளைகளாக இராணுவத்திற்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் பிறப்பித்தார். தீர்மானத்தைப் பொறுத்தவரையில் இது 'றோ' நடத்திய யுத்தம்; ஆனால் தேசத்தின் தலைவர் என்ற வகையிலும் இறுதிக்கட்டளையைப் பிறப்பிப்பவர் என்ற வகையிலும் இதற்கான பொறுப்பு பிரதமராய் இருந்த ராஜீவ் காந்தியையே சாரும்.

இலங்கை விவகாரத்தில் புலிகளை அணுகிய விதத்தில் இந்தியாவிற்குப் பெருந் தோல்வி ஏற்பட்டதை ஒரு குழந்தைகூட உணரும் இவ்வகையான தீர்மானங்களை எடுத்த பட்டனுபவம் மிக்கவர்கள் ''றோ'' வினர் ஆவர். சூடுபட்ட பூனை மாதிரிஇவர்களின் அனுபவம் பெறுமதியனது இந்தப்பெறுமதியான அனுபவம் கூறுகின்றது'' புலிகளைத்தடை செய்வது புத்திசாலித்தனம் இல்லை'' என்று

எம்.ஜி ஆரின். பெயரை தத்தெடுத்து அதன் பெயரால் முதல்வராய் வந்துள்ள ஜெயலலிதா இதற்கு எதிர்வளமாய் கருத்தை வெளியிட்டுவருகின்றார். புலிகளைத் தடைசெய்யுமாறு அவர் மத்திய அரசை வற்புறுத்திவருகிறார். ஜெயலலிதா இவ்வாறு கோரிவருவதற்கு ஏதாவது பின்னணிகள் உண்டா? நிச்சயமாக உண்டு.

ராஜீவ் மறுபடியும் பிரதமராகும் பட்சத்தில் தான் உதவிப் பிரதமராகலாம் என்ற நப்பாசை ஜெயலலிதாவிடம் இருந்தது. இதனை அவரே வெளிப்படையாகவும் கூறியிருந்தார் இதனால் ராஜீவின் மரணம் அம்மையாரின் நப்பாசைக்கு இறுதி மூழுக்குப் போட்டது இந்த நோக்காட்டின் வெளிப்பாடாக அம்மையார் புலிகளைத் தடை செய்யுமாறு கோரலாம் இது ஒரு தனிப்பட்ட காரணம் இதனை விடவும் இன்னொரு காரணமும் இருக்கலாம்.

**மு. திருநாவுக்கரசு**

திராவிட பாரம்பரியத்தின் பெயரால் எம்.ஜி ஆரைப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்துள்ளபிராமணியப்பெண்ணான ஜெயலலிதா திராவிடப் பாரம்பரியத்திற்கச்சாவுமணி அடிப்பதில் முழுமூச்சுடன் செயற்படுகின்றார் என்பது அனைவரும் அறிந்ததே அதேவேளை தமது தவறுகளினாலும் சீரழிந்துள்ள எதிரணியினரிடம் (தி.மு.க) ஜெயலலிதாவின் மாயத் தோற்றத்தை மக்கள் மத்தியிற் குலைக்கக்கூடியவல்லமை இல்லாத நிலையில் ஜெயலலிதா எதிரணியினரால் கொல்லப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அவ்வாறான கொலையைச் செய்துவிட்டு அதற்கான பொறுப்பைப் புலிகளின் தலையிற் போட்டுவிடுவதற்கான வாய்ப்பு இருக்கும் சூழலில எதிரணியினர் கூசாது தனக்கெதிரான கொலை நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்ற ஒரு கணிப்பீடு ஜெயலலிதாவிடம் இருக்கலாம். அத்துடன் புலிகளின் ஆயுதப் போராட்ட வடிவம் அங்கு அதிகாரத்தில் இருப்போருக்கு எதிராகச்செல்வாக்குப்பெறும் சூழல் காணப்படும் நிலையில் புலிகளைத் தடுப்பதன் பெயரில் முளையிலேயே அச்சக்திகளை ஒடுக்கிவிட வேண்டும் என்ற எண்ணமும் ஜெயலலிதாவிடம் இருக்கலாம். அதிகாரத்தில் உள்ளவர்கள் எப்போதுமே இப்படித்தான் யோசிப்பதுண்டு ஆனால் வரலாற்றறிவு உண்மையை மறுவளமாகவே காட்டுகின்றது என்பதை ஜெயலலிதா எப்போதுதான் உணர்வாரோ?

ராஜீவ் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுள் ஒருவர் நரசிம்மராவ், ராஜீவ் தலைமையிலான மந்திரி சபையில் எதிர்பார்த்த மந்திரிப் பதவியைப் பெறாதவர் நரசிம்மராவ், அதேவேளை ராஜீவ் பல தீர்மானங்களில் பங்கு கிடைக்காதவரும், ராஜீவ் தலைமையிலான கடந்த பொதுத்தேர்தலின் போது நரசிம்மராவ் போட்டியில் இருந்து ஒதுங்கிக்கொண்டவர் என்பதும் கவனிக்கத்தக்கது இதனால் ராஜீவ் மீது பிடிப்பற்றவராகவும், ராஜீவின் தீர்மானங்கள் மீது விருப்பற்றவராகவும் இருந்திருப்பார் என்பது தெளிவு. எனவே இலங்கை விவகாரத்தில் ராஜீவ் இழைத்த இமாலயத் தவறுகளை உணராதவராய் நரசிம்மராவ் இருக்க முடியாது. ராஜீவ் நிர்வாகம் ஈழத்தமிழரைக் கொன்று குவித்து இன்னற் படுத்தியதையும். ஆனால் ஈழத்தமிழர் இந்திய ஆட்சியாளர் மீது அடைந்திருக்கும் சீற்றத்தையும் நரசிம்மராவ் புரியாதவராய் இருக்க முடியாது புலிகளை இந்தியா தடைசெய்யுமாயின் ராஜீவ் ஈழத்திற்புரிந்த தவறுகளை விடவும் பெருந் தவறாகவே அது அமையும். பழுத்த அரசியல் அனுபவம் மிக்க நரசிம்மராவ் தடைசெய்கின்றதான தவறான முடிவை எடுப்பாரா?

புலிகளைத் தடைசெய்வதன் மூலம் ஏற்படக்கூடிய நீண்டகால விளைவை இந்திய இராஜதந்திரிகள் எடைபோடத் தவறக்கூடாது புலிகள் மக்கள் மத்தியில் வேர்விட்டுள்ளனர் அவர்கள் மட்டும் தான் இன்று தமிழ் மக்களின் உரிமைக்குரலாகவும் அதற்கான சக்தியாகவும் காணப்படுகின்றனர் எனவே புலிகளைத் தடைசெய்வதென்பது தமிழ் மக்களின் உரிமையைத் தடைசெய்வது என்று பொருள். தமிழ் மக்களின்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# ஒத்திப் போடப்பட்டு வரும் குடாநாட்டுச் சமர்

**ரிஷி கேசன்**

யாழ்.குடாநாடு இதுவரை இரண்டு பெரிய இராணுவ நடவடிக்கைகளைச் சந்தித்துள்ளது ஒன்று இலங்கைத் துருப்புககளால் மேற்கொளளப்பட்ட ஒபறேஷன் லிபறேஷன் இது வடமராட்சியில் மையங் கொண்டு பின் வலிகாமத்தை நோக்கி நகர்ந்தது. மற்றது இந்தியத் துருப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட ஒபறேஷன் பவான். இது வலிகாமத்தின் சில பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணம் நகரப்பகுதியை நோக்கி மையங் கொண்டது இவ்விரு ராணுவ நடவடிக்கைகளும் ஒரே ஆண்டிலேயே 1987 இல் நிகழ்ந்தன். ஒபறேஷன் லிபறேஷன் வசந்த காலத்தில் நிகழ்ந்தது. ஒபறேஷன் பவான் மழைக்காலத்தில் நிகழ்ந்தது.

1990 யூனில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானதிலிருந்து குடாநாட்டின் மீதான தாக்குதல் குறித்து அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. குடாநாட்டைப் பிடிப்பது என்பது இலங்கை இராணுவத்தைப் பொறுத்தவரை தத்துக்கள் மிகுந்த ஒரு கனவாகவே இருந்து வருகிறது.

ஒபறேஷன் லிபறேஷன், ஒபறேஷன் பவான் இரண்டின் போதுமிருந்த நிலைமைகள் இன்றில்லை. 87 இல் இருந்ததை விடவும் புலிகள் இன்று அதிகரித்த படையணிகளோடும், ஆயுதங்களோடும், படைத் தளபாடங்களோடும் காணப்படுகிறார்கள். இராணுவமும் அப்படித்தான். அவர்களிடமும் படையணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன சீனாவிடம் வாங்கிய டாங்கிகளும், போர் விமானங்களும் இப்போது இராணுவத்திடம் உண்டு. எனவே இம்முறை சமர் முன்னெப்பொழுதும் நிகழ்ந்திராத பயங்கரச் சமராக இருக்கப் போகிறது. இவ்வாண்டு பெப்ரவரியின் இறுதியில் இராணுவம் குடாநாடு மீது பாயும் என்று கூறப்பட்டது. பின்னர் இவ்வாண்டின் நடுக்கூறில் என்று கூறப்படுகிறது.

குடாநாடடுச் சமரில் ராணுவம் தனது வெற்றியை மிகவும் உறுதிப்படுத்த விரும்புகிறது. புலிகள் மிகவும் களைத்துப்போன நிலையில் அல்லது தனிமைப்பட்ட சூழலில் சமரை ஆரம்பிப்பது வெற்றியைத் திட்டவட்டமானது ஆக்கும் என்பது இராணுவத் தலைமைப்பீடத்தின் கணிப்புப் போலுள்ளது குடாநாட்டில் வெற்றி பெறுவதற்கு அவர்கள் நீண்ட காலமாகவே திட்டமிடும் தயாரித்தும் வந்திருக்கிறார்கள் இடையில் வரும் யுத்த அறிவிப்புக்கள் எல்லாம் வெறும் மிரட்டல்கள் அல்லது தந்திரோபாய நோக்கிலானவை. ஒபறேஷன் வலம்புரி குடாநாடடுச் சமரிற்கு முன்னோடியான ஒரு தயாரிப்பு நடவடிக்கைதான். இதன் மூலம் குடாநாட்டின் மீதான முற்றுகையை இராணுவம் மேலும் இறுக்கியது. குடாநாட்டின் இன்னொரு பிரதான வாசலை ராணுவம் மூடியது. இவ்வாறு படிப்படியான நீண்ட காலத் தயாரிப்புக்களின் இறுதியாகவே குடாநாட்டுச் சமரை ஆரம்பிக்க இராணுவம் விரும்புகிறது.

சீனாவிடம் வாங்கிய டாங்கிகளை ஓட்டுவதற்குப் பயிற்சி தேவைப்படுகிறது. டாங்கி ஓட்டி புலிகளின் ரொக்கற் றுகளுக்குத் தப்பி டாங்கியைச் செலுத்தும் அதே சமயம் டாங்கியிலுள்ள துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் இயக்க வேண்டியுள்ளது. புதிய போர் விமானங்களைப் பொறுத்த வரையிலும் ஓட்டிகளுக்குப் பயிற்சி தேவை. சீனன் குடா விமானத்தளத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்போடு இலங்கை விமானப் படையிடமிருந்த நவீன வசதிகள் பொருந்திய பயிலுனர் விமானத்தனம் முற்றாகச் சேதமடைந்து விட்டது. இதுவும் திட்டங்களைச் சீர்குலைத்தது. இடையில். சீன டாங்கிகளை வாங்கியதன் பின்னரே அவை மேலதிக உதிரிப்பாகங்கள் இன்றி வந்திறங்கியது தெரிய வந்தது. உதிரிப்பாகங்களை வாங்குவதற்கான ஏற்பாடுகள் எவையும் டாங்கிகளை வாங்கும்போது செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் இருக்கவில்லை என்பதுவும் பின்னரே தெரியவந்தது. மேலும் டாங்கிகள் யுத்தத்திற்குப் புதியவைகளாக இருந்தன. அவை ஏற்கனவே எந்தவொரு யுத்தத்திலும் ஈடுபடுத்தப்படாத புதிய ரகத்தைச் சேர்ந்தவை, மலிவானவை என்பதற்காக அவசரமாக வாங்கப்பட்டவை. எனவே டாங்கிகளை இயக்குவதற்குகள அனுபவம் உடைய ஓட்டிகளின் ஆலோசனையும் இல்லை என்றாகியது, இவை தவிர புலிகளின் புதிய வேகத் தாக்குதல்களால் கிழக்கிலும் வன்னியிலும் ரோந்து போகும் படையணிகளும ராணுவ தளங்களின் வெளிக்கவசமாக உள்ள காவலரண்களும் பாதுகாப்பிழந்து விட்டன. கிழக்கிலும் வன்னியிலும் ரோந்து போகும் படையினரின் பாதுகாப்புப் பற்றியும். தமது தளங்களின் எல்லைகளைப்பற்றியும் இராணுவத் தலைமைப்பீடத்திற்குப புதிதாகக் கவலைகள் தொடங்கியுள்ளன,

இப்படிப் பல காரணங்களின் பொருட்டாக குடாநாட்டின் மீதான தாக்குதல் தொடர்ந்தும் பிற்போடப்பட்டு வருகிறது.

இத்தனைக்கும் குடாநாட்டுச்சமர் கொழும்பிலுள்ள பத்திரிகை விமர்சகர்கள் கற்பனை செய்வது போல முழுக்குடாநாட்டையும் இராணுவம் கைப்பற்றி இங்கு சிவில் அமைதியையும் சிவில் நிர்வாகத்தையும் ஸ்தாபிப்பதற்கான ஒரு சமராக இருக்கும் என்பதல்ல இன்று இராணுவத் தளபதிகள் புதிதாக உபயோகிக்கும்வார்த்தைகளிற் கூறுவதனால், இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விஸ்தரிக்கும் ஒரு சமராகவே அது அமையும். அநேகமாக அது ஒரு குறியீட்டு இராணுவ நடவடிக்கையாகவே இருத்தல் கூடும். குடாநாட்டைப் பிடிப்பதோடு புலிகளின் கதை முடிந்து விடாது என்பதும், இந்தியப்படைத் தளபதிகள் (இலங்கையில் சமரிலீடுபட்டவர்கள்) கூறியது போல மெய்யான சமர் காடுகளிலேயே நிகழும் என்பதும் இலங்கை இராணுவத் தலைமைபீடத்திற்கு நிச்சயமாகத் தெரியும். புலிகளின் இருதய இடத்தில் ஒரு பெரிய சமர் நிகழ்ந்து அதில் ராணுவம் வெல்வது என்பது புலிகளின் முதுகெலும்பை உடைத்து விட்டதாக இலங்கை அரசு பிரசாரம் செய்ய உதவும். அப்படியொரு வெற்றியோடு பேச்சு வார்த்தைகளிற்கான தனது பேரம் பேசும் சக்தி அதிகரித்து விடும் எனவும் இலங்கை அரசுகருதக்கூடும் இந்த வகையில் குடாநாட்டுச் சமரை ஒரு அரசியல் இராணுவ நடவடிக்கை என்றும் வர்ணிக்கலாம்.

குடாநாட்டின் கேந்திர இடம் என்று கூறக்கூடிய ஒரு நிலப்பரப்பில் கடலை ஒரு பக்க எல்லையாகக் கொண்ட ஒரு தளத்தை நிறுவுவதில் இராணுவம் வெற்றி பெறுமாயின் அதோடு இராணுவம் தனது வேகத்தைத் தணித்துக் கொள்ளும் என்று பெரும்பாலும் நம்பலாம்.

முழுக் குடாநாட்டையும் ராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள்கொண்டுவரும்என்பது ஒரு பெரிய கற்பனைதான், ஏனெனில் ஒரு லட்சம் துருப்புக்களை வைத்துக் கொண்டு இந்தியப்படை இங்கு முடிவற்றதொரு யுத்தத்தில் ஈடுபட்டது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது ஒரு லட்சம் இந்தியத்துருப்புக்களும் சமர்க்களத்திலேயே நின்றார்கள் என்பது. அதாவது விடுமுறையிலும் மாற்றலாகியும் போகும் துருப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஒத்திப்போடப்பட்ட

புக்களின் சுழற்சிமுறை நகர்வையும் தவிர்த்து ஒரு லட்சம்பேர். ஆனால் இலங்கை இராணுவத்தின்துருப்புக்களின் மொத்த எண்ணிக்கை 76,000 என்றே சொல்லப்படுகிறது. இதில் தமிழர்தாயகத்திற்கு வெளியிலுள்ள இராணுவ நிலைகளிலும் கேந்திர இடங்களிலும் கடமையிலீடுபடும் துருப்புக்களின் எண்ணிக்கையையும், கழித்துவிட்டால் ஆகக்கூடியது 50,000 துருப்புக்களே இங்கு வட, கிழக்கில் சமரிலீடுபடுகிறார்கள் இவர்களுக்கும் விடுமுறை தேவை. காயப்பட்ட இறந்த, ஊனப்பட்ட துருப்புக்களின் இடத்திற்குப் புதிய ஆட்கள் தேவை. ஏற்கனவே துருப்புக்களிற்கு ஓய்வு இல்லை என்றும் காவல் நிலைகளில் உள்ள துருப்புக்கள் நீண்ட காலத்திற்கு விடுமுறையில் போக அநுமதிக்கப்படவில்லை என்றும் இராணுவத்தில் உள்ள அதிருப்தியாளர்கள் குறை கூறுகிறார்கள். மேலும் கிழக்கில் புறநகர்ப் பகுதிகளிலும், காடுகளை அண்டிய கிராமங்களிலும் இராணுவம் இன்னும் தனது நிலைகளைப் பலப்படுத்தவில்லை. இந்நிலையில் பெருகியுள்ள புலிகளின் படையணிகளோடுமோதி குடாநாட்டை தனது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இராணுவத்திடம் ஆள்பலம் போதாது.

குடாநாட்டுச் சமரிற்கு 50 000 துருப்புக்கள் தயார் என்ற அறிவிப்பு வெறுமனே பிரசார உள்நோக்கம் கொண்டது. எதிர்த்தரப்பினரின் உளவியலைப் பலவீனப்படுத்தும் ஓர் உத்தியாகவே அதைக் கருத முடியும். இவ்வாறு 50,000 துருப்புக்கள் சமரிலீடுபட்டால் அண்ணளவாக 15,000 துருப்புக்கள் வரை கொல்லப்படவோ, ஊனப்படவோ நேரிடும் என்றும், 20,000 பொதுமக்களாவது கொல்லப்படக்கூடும் என்றும் ஒரு குத்து மதிப்பீடு கொழும்பில் உண்டு.

ஆனால் இரண்டாவது ஈழப்போரின் அனுபவம் என்னவெனில், எங்கு சண்டை நிகழ்கிறதோ அங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்து விடுகிறார்கள் என்பதே' 'ஏனெனில்இம்முறை சண்டை ஒரு மரபுப்போரைப் போல நிகழ்கிறது. சீனத்தயாரிப்பான ரி 55, ரி 85 ரகத் தாங்கிகள்யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுவதில் இருந்தே சண்டையின் பரிமாணத்தை, உக்கிரத்தை விளங்கிக் கொள்ளலாம். எனவே சண்டைநிகழும் நிலப்பரப்பும் பெரியது. இதனால்சண்டைக்களத்திலிருந்து சனங்கள் முற்கூட்டியே வெளியேறி விடுவார்கள். பெரும்பாலும் மக்கள் அற்ற தெருக்களிலும் கைவிடப்பட்ட கிராமங்களிலுமே சண்டை நிகழும். இராணுவம் ஏதாவது ஒரு நிலப்பரப்பை கைப்பற்ற முடிந்தாலும் கூட, அது கைவிடப்பட்டகிராமங்களைக் கொண்ட நிலமாகவே அமையும். இங்கு நாம் தீவுப்பகுதி அநுபவங்களை நினைவு கூர

(7 ஆம் பக்கம் பார்க்க)


# வர்த்தக வங்கி

# புத்தாண்டுப் பரிசுப் போட்டி முடிவுகள்

மேற்படி எம்மால் நடாத்தப்பட்ட போட்டியில் சரியான விடையளித்தவர்களில் 50 அதிர்ஷ்டசாலிகளை தேர்ந்தெடுத்துள்ளோம். பரிசு பெற்றவர்கள் புத்தாண்டு தினத்தன்று முற்பகல் 10.00 மணியளவில் (13-04-92) வங்கியில் நடைபெறும் விழாவிற் கலந்து பரிசில்களைப் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகின்றோம்.

## பரிசு பெற்றவர்களின் விபரம்

முதற் பரிசு :- *கருணாகரன் தர்மகரசி*
107,கனகரெட்ணம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு :- ஜே. றிச்சார்ட் றெனோல்ட்ஸ்
நவாலி வடக்கு, மானிப்பாய்.

மூன்றாம் பரிசு :- *சின்னவீரப்பன் ஆறுமுகம்*
376, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்

## மிகுதி 47 ஆறுதல் பரிசுகளுக்குமுரியோர்:

01. செல்லப்பா நடராசா
சிவன்கோயிலடி, வட்டு-மேற்கு, வட்டுக்கோட்டை.
02. கந்தசாமி ரூசாந்தன்
C.M.S ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
03. திருமதி யோ. மகேந்திரலிங்கம்
'வேம்போலை', இணுவில் கிழக்கு, இணுவில்.
04. தம்பித்துரை நவரட்ணவேல்
ஊர் எல்லை வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.
05. திருமதிச. கலாராணி
'ரேவதி இல்லம்', பிரதான வீதி, இளவாலை.
06. செல்லத்துரை சுரேந்திரன்
கம்பன் கழகம். இல. 300, நல்லூர், யாழ்ப்பாணம்.
07. சோமு நாகராஜன்
320, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
08. மகேஸ்வரி இலங்கைநாயகம்
மண்டேலா புத்தகசாலை, இல. 2, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
09. சரஸ்வதி வேலாயுதம்
'துரை பேக்கரி', சூராவத்தை, சுன்னாகம்.
10. செல்வி. யசியானா யேசுராஜன்
60, சென் பெனடிற் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
11. வடிவேல் சிவஞானம்
பிள்ளையார் கோயிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
12. செல்வி அனெற் செல்வினி கிறிஸ்தோப்பர்
33/21, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.
13. ஆர். புவனேந்திரன்
750, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
14. அண்ணாமலைநாதன் தங்கேஸ்வரி
'' தெய்வபதி'', தென்மேற்கு, வட்டுக்கோட்டை
15. மஞ்சுளா பரமேஸ்வரன்
''ராஜஸ்தான்'', பருத்தித்துறை வீதி, கொடிகாமம்
16. சுகிர்தா பாலசிங்கம்
கந்தரோடை, சுன்னாகம்
17. திருமதி இராஜலக்ஷ்மி புவனேந்திரன்
163, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
18. தர்மினி நவரட்ணம்
131/1, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்
19. த. புஸ்பமலர்
64/14, முருகமூர்த்தி, வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
20. தேவலோசனி குமரவேள்
383, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
21. கதிரித்தம்பி சுப்பிரமணியம்
''சிந்தாமணி'', நீலியம்பனைப்பிள்ளையார் கோயிலடி மல்லாகம்
22. செல்வன், நவரத்தினம் ஜெயரூபன்
மீசாலை வடக்கு, ஊர் எல்லை வீதி, மீசாலை
23. சுப்பிரமணியம் செல்லம்மா
கார்த்திகேசு வீதி, மீசாலை தெற்கு,மீசாலை
24. துரைராஜசிங்கம் திருக்குமார்
சேர்ச் அருகாமை (Near Church) கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
25. திருமதி நடேசகாந்தன் ஜெகதீஸ்வரி
9, 2ம் குறுக்குத்தெரு, கொழும்பகம் வீதி, யாழ்ப்பாணம்
26. செல்வி கந்தப்பு சுகந்தினி,
நாவலர் பாடசாலை வீதி, கோப்பாய் தெற்கு.
27. சாரிள்ஸ் நவரட்ணம் ஷெரின் கோமதி.
புலவர் வீதி, நவாலி - வடக்கு, மானிப்பாய்.
28. திருமதி சகுந்தலா குணரத்தினம்.
பிரதம தபால் அலுவலகம், யாழ்ப்பாணம்.
29. குருசுமுத்து பீற்றர்.
புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
30. சாந்தி அமிர்தலிங்கம்
49, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
31. S. சண்முகலிங்கம்
வாசிகசாலையடி, உடுப்பிட்டி.
32. தேவலிங்கம் ஜெயரத்தினம்
A. குலசேகரம் மே / பா, புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.
33. ஆறுமுகக் குருக்கள் சத்தியபாமா
புலவனார் ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ் நகர்.
34. இ. சரஸ்வதி
இல. 55, துர்க்கை அம்மன் கோயிலடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி
35. சபாபதிப்பிள்ளை தியாகராஜா
'கனல்' ஒழுங்கை, மாதகல்.
36. சுப்பிரமணியம் செல்வராசா
கைதடி தெற்கு, கைதடி.
37. நடராஜா செல்வவினாயகன்
துரைவீதி, கோண்டாவில் மேற்கு கோண்டாவில்
38. திருமதி யோகலக்ஷ்மி ராஜரட்ணம்
உடையார் வளவு, உரும்பராய்.
39. சியாமளா துரைச்சாமி
இல. 200, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.
40. வயிரவன் இராசையா ( தோரையன் )
''மடத்துக்கடவை'' அல்வாய் மேற்கு, அல்வாய்.
41. குணரட்ணம் தேவிகா
49/3, வில்வத்தெரு வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்
42. திருமதி இராசாத்திப்பிள்ளை சிவராமகிருஷ்ணன்.
செட்டியார் வளவு, சுன்னாகம்.
43. திருமதி சுந்தரேஸ்வரி நவரெட்ணராஜா
'' ஸ்ரீ சக்தி '' யாழ்வீதி, மானிப்பாய்.
44. கணபதி சிறிதரன்
கைதடி மேற்கு, கைதடி.
45. செல்வி மாலதி சிவஞான சுந்தரம்
'' பழமுதிர் சோலை'', நீலியம்பனை, மல்லாகம்.
46. கந்தசாமி இந்திராணி
உச்சியோடை ஒழுங்கை, மானிப்பாய்.
47. ஐயாத்துரை இரத்தினமாலா
'' லக்ஷ்மி தாரகை'', அல்வாய் மேற்கு, அல்வாய்.

இப் போட்டியில் பங்கு பற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"உங்கள் வெற்றி எங்கள் பலம்"

COMMERCIAL BANK

# வர்த்தக வங்கி

474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4130)



**UNIVERSITY OF JAFFNA**

**TENDER NOTICE**

*Tenders are invited for the Construction of Temporary Spectator Shed at Sports Complex University of Jaffna from Contractors registered for building works with University of Jaffna or ICTAD*

*Tenderforms can be obtained from works Engineer University of Jaffna from 21. 4. 92–23. 4. 92 during working hours on producing a receipt from Bursar University of Jaffna for the following.*

*Non - refundable deposit Rs. 200/-*
*Refundable deposit Rs. 2000/-*

*Perfected tenders should be sent to reach the Registrar University of Jaffna on or before 5. 5. 92 at 10. 00 a. m.*

*Tender board University of Jaffna reserves the right to reject any tender*

**REGISTRAR**

*University of Jaffna*
*Thirunelvely, Jaffna.*

(சி- 4136)

# இராணுவ அதிகார அமைப்பு மாற்றத்தினால் பலம் பெற்றுள்ள கடும் கோட்பாட்டாளர்

சிறிலங்கா ஆயுதபடைகளின் கட்டளையிடும் கட்டுப்படுத்தும் முறைகளில் சிறிலங்கா ஜனாதிபதி புதிய மாற்றங்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடுத்துள்ளார். இவ் அறிவித்தல்களின் மூலம் இனப்பிரச்சினைக்கு



லெப்ரினன்ட்ஜெனரல் வைத்தியரெட்ணா

இராணுவ ரீதியான தீர்வை அரசாங்கம் முனைப்பாக நாடி நிற்பது தெரியவருகின்றது.

### அதிகார மாற்றங்கள்

எதிர்பாராத விதமாகமேற்கொள்ளப்பட்ட இம்மாற்றங்களின் பிரகாரம் இதுவரை வடக்கு கிழக்கில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் கூட்டுப்படை தலைமையகம் வகித்து வந்த அதாவது ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா வகித்து வந்த அதிகாரங்களின் முப்படைகளின் தளபதிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் பகிர்ந்தளிக்கப் படுகின்றன. அதேவேளை பொலிஸ் பிரிவும் புலிகளுக்கு எதிரானநடவடிக்கைகளில் தீவிரபங்கேற்கும்.

இம்மாற்றத்தின் பிரகாரம் இதுவரை போர்முனையில் ஈடுபட்டிருந்த முப்படைகளும் மற்றும் ஏனைய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசாரும் கூட்டுப்படை தலைமையகத்தின் கட்டளைகளில் தங்கியிருந்த நிலை மாற்றமடைகின்றது இதன் காரணமாக கூட்டுப்படைகளின் தலைமை குறிப்பிடக்கூடியபலவீனமடைகின்றது.

இதேவேளை முப்படைகளின் தளபதிகளின் அதிகாரங்களும் பொலிஸ்மா அதிபரின் அதிகாரங்களும்பல மடைகின்றன யுத்த நடவடிக்கைகளுக்கு நேரடியாககட்டளைகளையும். ஆணைகளையும் பிறப்பிக்கும் அதிகாரத்தை முப்படைகளின் தளபதிகளும் பெறுகின்றனர். இதேவேளை வடக்கு கிழக்கில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புச் சபையில் வகுக்கப்படும் பொதுத்திட்டத்தின்படி வகுக்கப்படும். இத்தேசியபாதுகாப்புச்சபையில் இராணுவ கடற்படைவிமானப் படைத்தளபதிகளும் பொலிஸ் மா அதிபரும் அங்கம் வகிப்பர்.

இத்தேசிய பாதுகாப்புச் சபை வகுக்கும்யுத்த தந்திரோபாயங்களில் கூட்டுப்படைத் தலைமையகம் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது ஆனால் ஆலோசனைகளை வழங்கலாம். இது குறித்து தேசியபாதுகாப்புச் சபையே இறுதி முடிவு எடுக்கும்

இவ் அதிகார மாற்றத்தின் மூலம் இராணுவ, கடற்படை, விமானபபடை, பொலிஸ் உயர் அதிகாரிகள் குறிப்பிடக் கூடிய அளவில் பெருமளவு அதிகாரங்களைப் பெறுகின்றனர். இம்மாற்றத்தின் மூலம் கடந்த நவம்பர் மாதத்தில் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன என்றே கொள்ளலாம். அதாவது ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவிடம் இருந்து அதிகாரங்கள் பறிக்கப்பட்டு பெரும்பகுதி இராணுவத்தளபதி சிசில் வைத்திய ரெட்ணாவிடமும் ஏனையோரிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

### இராணுவ அதிகாரிகள் முரண்பாடு

இராணுவ அமைப்பில், கட்டளையிடும், கட்டுப்படுத்தும் நிலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றமானது, சிறிலங்கா ஆயுதப்படையினருள், இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னாவின் கை அரசியலிலும், இராணுவத்திலும் ஓங்கியுள்ளதன் வெளிப்பாடு என்றே கொள்ளலாம்.

கடந்த நவம்பர் மாதத்தில். இராணுவத் தளபதியாக இருந்துஓய்வு பெறவிருந்த இராணுவத்தளபதி, ஜெனரல் ஹமில்டன்வனசிங்காவின்பதவிகாலம் கூட்டுப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டதன் மூலம் நீடிக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு, ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்தின் பின்னர் கைவிடப்பட்ட கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகச் செயற்பாடு, கடந்த ஆண்டு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டு ஹமில்டன் வணசிங்காவிற்கு வழங்கப்பட்டது

இதே வேளை அடுத்த இராணுவத் தளபதி யார் என்ற சர்ச்சையும் இருந்தது. இச்சர்ச்சையில் தற்போதைய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னாவின் பெயரும், தற்போதைய வடக்கு இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் பெயரும் முக்கியமாக அடிபட்டன. இதனால். அரசாங்கம் இந்நியமனத்தில் சிறிது காலதாமதமும் செய்தது. பின்னர் மூப்பின் அடிப்படையில் (சேவைக்காலம்) சிசில் வைத்தியரெட்னாவிற்கு இராணுவத் தளபதிப் பதவி வழங்கப்பட்டு வந்தது.

இதன் பிரகாரம் மேஜர் ஜெனரலாக இருந்த சிசில் வைத்திய ரெட்னா, லெப். ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்றார். ஆனால், இராணுவத் தளபதியாக இருந்த லெப். ஜெனரலாக இருந்த ஹமில்டன் வனசிங்கா, ஜெனரலாக பதவி உயர்வு பெறறு கூட்டுப்படைத்தலைமைத்தளபதியாக நியமிக்கப்படடமை இதுவரை காலமும் இராணுவத தளபதிக்கு இருந்து வந்த அதிகாரங்களை மட்டுப்படுத்துவதாக இருந்தது அத்தோடு. மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கூட்டுப்படைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுடன் நல்லுறவையும், இணக்கப் போக்கையும் கொண்டிருந்தார். இந் நிலையானது. இராணுவத் தளபதியின் அதிகாரத்தையும், ஆளுமையையும் சர்ச்சைக்கு உள்ளாக்கியிருந்தன. இதனால் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா மனத்தாங்கலுக்கு உள்ளாகியிருந்தார்.

> கடும் கோட்பாட்டாளரிடம் அதிகாரம் கைமாறியதினால் புலிகளை இராணுவ ரீதியாகத் பலப்படுத்தும் அதேவேளை, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் வழி என்ற கருத்துடைய இராணுவ அதிகாரிகளும் ஓரம் கட்டப்பட்டனர்.

### பிரேமதாசாவின் கடந்த வருட நிலைப்பாடு

இதேவேளை, கடந்த வருட மத்தியில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பெரும் அரசியல் சர்ச்சையிலும், அவரது அரசாங்கம் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களிலும் சிக்கியிருந்தது சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றவியல் நீதி விசாரணை கோரும் பிரேரணை குற்றச்சாட்டு காரணமாக பெரும் அரசியல் நெருக்கடி ஏறபட்டிருந்தது. இந்திய இராணுவத்தினருடன் புலிகள் போரிட்டுக் கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை திரு. பிரேமதாசா வழங்கினார் என்பது இதில் பிரதான குற்றச்சாட்டாகும். இந் நிலையில், திரு. பிரேமதாசா விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த லெப. ஜெனரல் வணசிங்காவின் ஆதரவு அவருக்கு அவசியமாக இருந்தது.

அத்தோடு மனித உரிமைகள் மீறல் தொடர்பாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெரும் கண்டனங்களுக்கும் சிறிலங்கா அரசாங்கமும். இராணுவமும் உள்ளாகியிருந்தன. இதனால் வெளிநாடடு உதவிகள் பாதிக்கப்படும் என்ற நிலையும் இருந்தது இந்நிலையில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஒப்பீட்டு ரீதியில் கடினப் போக்கு அற்றவரும், நெருக்கடியான

> சிறிலங்கா ஆயுதப் படைகளின் கட்டளையிடும், கட்டுப்படுத்தும் அமைப்புக்களில் ஏற்பட்டுள்ள அதிகார மாற்றம இராணுவக் கடும் கோட்பாட்டாளர்களின் கையை வலுப்படுத்தியுள்ளதோடு, இனப்பிரச்சினைத் தீர்விற்கு அரசாங்கம் எதிர்காலத்திலும் இராணுவத் தீர்வையே நாடி நிற்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

யாக இருந்த போதிலும் இதனை ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவும், மேஜர் டென்சில் கொப்பேகடுவவும் பல முறை இராணுவத்தினரின் மத்தியில் வலியுறுத்திப் பேசியிருந்தனர். அதோடு விடுதலைப் புலிகளை இராணுவ



ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா

ரீதியாகப் பலவீனப் படுத்தும் அதேவேளை இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு ஒன்றே வழி என்றும் இவர்கள் கருதினார்கள்.

### இராணுவத் தோல்விகளும் எதிர்ப்பும்

கூட்டுப்படைத் தலைமையகம் மீண்டும் தனது செயற்பாடுகளைத் தொடங்கிய வேளை, இராணுவம் வடக்கிலும் கிழக்கிலும் மிகவும் பலமான நிலையில் இருப்பதாகப் பிரசாரங்கள் செய்யப்பட்டன ஆனையிறவிலும் மணலாற்றிலும் பெரும் வெற்றிகள் ஈட்டியதாகவும் புலிகள்பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளதாகவும் தொடர்ச்சியாக இராணுவ வட்டாரங்களினால் செய்திகள் வெளியிடப்பட்டன.

ஆனால் வடக்குக் கிழக்குப் போரில் இராணுவம் பாரிய வெற்றிகளை ஈட்டியதாக

ஒத்திப் போடப்பட்டு லாம்!

இராணுவம் சீனாவிடம் வாங்கிய டாங்கிகளையும் போர் விமானங்களையுமே பெருமளவு நம்பியுள்ளது. டாங்கிகள் யாழ்குடாநாட்டிலேயே முதன்முதலாக ஒரு நகர்ப்புறப்போரில் ஈடுபடப் போகின்றன, இதுவரைநகர்ப்புறப்போர் எதிலும் பயிற்றப்படாத புதிய விமானங்களின் ஒட்டிகளிற்கும், டாங்கி ஓட்டிகளிற்கும் குடாநாட்டுச்சமர் உயிராபத்து மிகுந்தவொரு பரீட்சையாகவே அமையும், டாங்கிகள் இதுவரை வனப் போரிலேயே வன்னியிலேயே பரீட்சிக்கப்பட்டுள்ளன. ஒரு நகர்ப்புறப்போரில், அதாவது கட்டட இடிபாடுகளை உடைய, அதிகம் திருப்பங்களை உடைய குடாநாட்டின் குறுகலான தெருக்களில் மேறபடி டாங்கிகள் வெற்றியளிக்குமாஎன்பது பரீட்சிக்கப்பட வேண்டிய ஒரு அம்சம். விமானங்களின் விசயத்திலும் அப்படித்தான், புதிய போர் விமானங்கள் அடர்ந்த மணலாறுக்காடுகளில் மட்டும் குண்டு வீசிப்பழகியுள்ளன மரங்கள் அடர்ந்த மணலாறுக் காட்டில் குண்டுகளை வீசுவது வேறு, சனங்கள் அடர்ந்த நகர்ப்புறத்தில் குண்டுகளை வீசுவது வேறு எனவே விமான ஓட்டிகளிற்கும் டாங்க ஓட்டிகளிற்கும் குடாநாட்டுச்சமர் ஒரு பதற்றம் மிக்க பரீட்சைக்களம் தான்.

இராணுவம் குடாநாட்டுச் சமரின் வெற்றியை உறுதிப் படுத்த விரும்புகிறது என்பதால், புலிகளை குடாநாட்டிற்கு வெளியில் காடுகளிலும் காடுகளை அண்டிய கிராமங்களிலும்மரபுப்போரிற்குவலிந்து இழுத்து. அவர்களின் போர் வலுவை இயன்றவரை பலவீன படுத்த எத்தனிக்கிறது. இன்று இந்தியாவில் புலிகள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் பாக்கு நீரிணையிலும் இந்தியா புலிகளைத் துரத்துகிறது. எனவே வினியோக வழிகள் பெரிதும் அடைபட்ட நிலையில் புலிகள் பெரிய சமர்களில் ஈடுபட்டால் தங்களிடமுள்ள சேமிப்பு வெடிப் பொருட்களைத்தான் செலவழிப்பார்கள்என்றும் இராணுவம் நம்புகிறது ஆனால் புலிகளின் தந்திரமான படைவிலகல்களால் மேற்படி உத்தியும் வெற்றிபெறவில்லை.

இந்நிலையில் இந்தியா புலிகளைத் தடைசெய்வது குறித்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறது இது இலங்கை இராணுவத்திற் உற்சாகமூட்டும ஒரு செய்தி சில சமயம் இந்தியா புலிகள் குறித்து திட்டவட்டமானதொரு எதிர் நிலைக்கு வரும் பட்சத்தில் அது குடாநாட்டுச் சமரிற்கு விரைந்துபோகும்படி இலங்கை இராணுவத்தைத் தூண்டுவதாக அமையும். மேலும் புலிகளின் வினியோக வழிகளை அடைப்பதில் இலங்கை அரசு இந்தியாவிடம் தெளிவாக வரையறுக்கப்பட்ட உதவிகளைப் பெறுவதும் அப்போது சாத்தியமாகிவிடும்

வெற்றியோடு பேச்சுவார்த்தைகளிற்கு வருவதே இலங்கை அரசின் நோக்கம் போலுள்ளது ஆனால் சமாதானத்திற்கான கடைசிச் சந்தர்ப்பத்தை இழப்பது எந்த வகையிலும் வெற்றியாகாது என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டியது இலங்கை அரசுதான் ஏனெனில் குடாநாடு தாக்கப்பட்டால், அதன்பின் புலிகள் பேச்சுவார்த்தை குறித்து இன்று கொண்டுள்ள நிலைப்பாட்டினையே தொடர்ந்தும் பேணுவார்கள் என்பதற்கில்லை. அநேகமாக அவர்கள் முடிவற்ற ஒரு யுத்தத்திற்குத் தயாராகக் கூடும்.

காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்தவரும் அரசின் இரகசியங்கள் பலவற்றைத் தெரிந்தவருமான ஹமில்டன் வணசிங்காவையே தொடர்ந்தும் அதிகாரத்தில் வைத்திருத்தல் தமக்குச் சாதகமானதெனக் கருதினார். அத்தோடு ஆனையிறவுப் போர், மணலாற்றுப் போர்களினால் இராணுவத்தினரின் கை வடபகுதியில் ஓங்கியிருப்பதாகச் செய்யப்பட்ட பிரசாரமும் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவின் மீள் நியமனத்திற்குத் துணையாக இருந்தன.

ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவின் மீள் நியமனத்தைத் தொடர்ந்து அன்றைய சூழ்நிலைக்கேற்ப இராணுவத் தந்திரோபாயமும் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவால் வைக்கப்பட்டது புதிய தந்திரோபாயம் விடுதலைப்புலிகள் மீது கடும் தாக்குதல்களை நடத்தும் அதேவேளை தமிழ் மக்களை காருணியமாக நடத்துவதெனவும் அறிவிக்கப்பட்டது இவ் யுத்த தந்திரோபாயத்தின் பிற்பகுதி எந்தளவிற்கு நடைமுறையில் கையாளப்பட்டது என்பது கேள்வி

செய்யப்பட்ட பிரசாரத்திற்கும் உண்மைக்கும் இடையில் தொடர்பில்லையென்பது காலப் போக்கில் புரியவந்தது. விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கில் இன்னமும் பலமான நிலையில் உள்ளார்கள் என்பது நிருபிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்ட அதிரடித்தாக்குதல்கள் இதனை உணர்த்துபவையாக இருந்தன.

கிழக்கில் புலிகளின் இன்றையநிலைபற்றிக் குறிப்பிட்ட திருமலை மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் சிறில்

## ஜெயராஜ்

பீரிஸ் "நாம் திரும்பட சமரளித்து வரினும் புலிகள் இப்பொழுதும் இங்கே தாக்கும் சக்தி படைத்தவர்களாகவே உள்ளார்கள்" எனத் தெரிவித்தார். இதை வலியுறுத்துமாப் போல் இவ்வருடம் ஜனவரி மாதம் (21-01-91) குச்சவெளியிலும் (20 இராணுவம்) அதே மாதம் (29-01 92) சிங்கபுரவிலும் (18 இராணுவம்)

(8ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த மாதம் (20 - 02 - 92) கருவேப்பங்குளத்திலும் (23 விமானப்படையினர்) அதே மாதம் (27-02-92) வாழைச் சேனையிலும் (27 இராணுவம்) கடந்த மாதம் (25 - 03 - 92) செங்கலடியிலுமாக (22 இராணுவம்) பெருமளவு எண்ணிக்கையில் இராணுவம் கொல்லப்பட்டமையும். பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும் அமைந்தது.

இதேபோன்று வட பாகத்தின் கடற்பரப்பிலும் தரைப் பரப்பிலும் சிறிலங்கா இராணுவம் பேரிழப்பைச் சந்தித்தது. இந்நிலையில் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவின் போர் தந்திரோபாயம் விமர்சனத்திற்குள்ளது.

இவ்வாறான தொடர்ச்சியாக புலிகளின் துணிகரத் தாக்குதலாலும், தியாகத்தாலும், புலிகளுக்கு ஏற்பட்ட வெற்றியை ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவிற்கும், அவரது ஆதரவாளருக்கும் எதிராக இராணுவத்தளபதியும், அவரது ஆதரவு வாளர்களும் கோட்பாட்டாளர்களும். பயன்படுத்திக் கொண்டனர் தொடர்ந்துஏற்படும் தோல்விகளுக்கும் இராணுவத்தந்திரோபாயத்தில் உள்ள குறைபாடும், அதிகாரங்கள் கூட்டுப்படைத்தலைமைத்தளபதியிடம் குவிந்து போயுள்ளமையும் நிர்வாகச் சீர்கேடுமே காரணம் எனக் குற்றம் சாட்டினர்.

அத்தோடு, ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவின் நிர்வாகத்தில் பல உயர் இராணுவ அதிகாரிகள் யுத்தமுனைகளுக்குச் செல்லாமல் கொழும்பில் தங்கியிருப்பதாகவும், இதனால் யுத்த முனையில் தொடர்ந்து ஈடுபடும் அதிகாரிகளும், இராணுவத்தினரும் சலிப்படைந்து உள்ளதாகவும் ஒரு பெரும் பிரச்சினை கிளப்பப்பட்டது இதன் மூலம் ஜெனரல் ஹமில்டன் ஆளுமையும் கேள்விக்குள்ளாகியது.

### பிரேமாவின் நிலையிலும் மாற்றம்

இதேவேளை சிறிலங்கா ஜனாதிபதியும் கடந்த வருடத்தின் பிற்பகுதியில் கொண்டிருந்த நிலையில் இருந்து தனது அரசியல் அணுகு முறையில் மாற்றங் கொண்டு வர வேண்டிய நிலையில் இருந்தார். கடந்த வருடத்தின் பிற்பகுதியில் இருந்தபுலிகளுக்குஆயுதம் வழங்கினார் என்ற குற்றச் சாட்டுமறைந்து போனபோதிலும் தென்னிலங்கையில் தமக்கு எதிராக அரசியலில் நெருக்கடி வலுத்து வருவதை அவர் கணிப்பிட்டுள்ளார். இந்நிலையில் ஜெனரல் ஹமில்டன்வணசிங்காவை விட இராணுவக் கடும் போக்காளரான சிசில் வைத்திய ரெட்னா போன்றவர்கள் அவருக்கு அவசியமாகினர்.

ஏனெனில் தென்னிலங்கையில் ஏற்படும் தனக்கு எதிரான ஓர் அரசியல் நெருக்கடியைச் சமாளிக்க இராணுவ ரீதியில் உதவக்கூடியவர்களும் வடக்கு, கிழக்கு யுத்தத்தில் விரைவில் குறிப்பிடக் கூடிய வெற்றியை ஈட்டிஅரசியலைத் திசை திருப்பக்கூடியவருமான ஒரு இராணுவக் கடும் கோட்பாட்டார் தேவையாக இருந்த நிலையில் மேஜர் ஜென்ரல் சிசில் வைத்திய ரெட்னாவிடம் பெரும் பொறுப்புக்களை ஒப்படைக்க முடிவு எடுக்கப்பட்டது.

### இராணுவ கடும் கோட்பாடும் புதிய தந்திரோபாயமும்

தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா ஓர் இராணுவ கடும் கோட்பாட்டாளர். தென்னிலங்கையில் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் சிறிலங்கா இராணுவம்மேற்கொண்ட படுகொலைகளுடன் நெருங்கிய தொடர்பு உடையவர் எனத் விமர்சிக்கப்பட்டவர் 1990 யூனில் யுத்தம் தொடங்கிய போது கிழக்கு மாகாணத்திற்கு இவர் பொறுப்பாக இருந்தார். அப்பொழுது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கிழக்கில் கொல்லப்பட்டார்கள். தான் ஒருகடும்கோட்பாட்டாளர் என்பதை அவரே தெரிவித்தும் உள்ளார்

மேலும்முப்படைத்தளபதிகளிடம்அதிகாரங்கள் கைமாறியவுடன் தற்பொழுது வடக்கு கிழக்கிற்கெனபுதியஇராணுவ தந்திரோபாயம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இதன்படிமுதலில் கிழக்கில் இருந்து பாரிய இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளை வெளியேற்றுவதாகும். புதிய தந்திரோபாயத்தின் படி மூன்று மாதத்திற்குள் இது சாத்தியப்படும் எனத் திட்டமிட்டுள்ளது. இதேவேளை, இராணுவ நடவடிக்கை கடுமையானதாக இருக்கும் என்பதனால் பெருவளவு மக்கள் உயிரிழக்க நேரிடலாம் எனவும் இராணுவ வட்டாரங்களில் கருதப்படினும் அவை கவனத்திற் கொள்ளப்படவில்லை,

இவற்றைக் கூர்ந்து நோக்கும் போது சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா இனப்பிரச்சினைக்கு விரைந்த ஓர் தீர்வைக்காண முற்படுவதாகத் தெரிகின்றது. இதன் மூலம் தென்னிலங்கையில் எழும்பும் அரசியல் நெருக்கடியை வெற்றி கொள்ளலாம் என அவர் திட்டமிடுவது போல் உள்ளது ஆனால் இராணுவத்தின் கடும் நடிவடிக்கைகள் ஒரு போதும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போவதில்லை மாறாக நெருக்கடிகளை உண்டு பண்ணி அரசியல் நெருக்கடிகளை மீண்டும் தீவிரமாக்குவதாகவே இது அமையும். அத்தோடு, இவ் அணுகுமுறை பாரதூரமான விளைவுகளை உண்டு பண்ணுபவையாகவும் மாறக் கூடும்,




### க. பொ. த.

யாழ். இந்துக்கல்லூரியில் ஒருமாணவன் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளார். 10 பேர் ஏழுபாடங்களில் விசேட சித்திபெற்றுள்ளனர். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் ஒருமாணவன் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தியைப் பெற்றுள்ளார். ஐந்துமாணவர்கள் ஏழுபாடங்களில் விசேட சித்தியைப்பெற்றிருக்கின்றனர்.

வேம்படி மகளிர் பாடசாலையில் ஒருவர் மட்டுமே ஏழு பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்கிறார் இவருக்கு ஒரு பாடத்திற்கான பெறுபேறு கிடைக்கவில்லை யாழ். மத்திய கல்லூரியில் ஒருவர் ஏழு பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்கின்றார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருவர் ஏழு பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்கின்றனர். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் ஒருவர் ஏழு பாடங்களில் விசேட சித்தி பெற்றிருக்கிறார் இவருக்கு ஒரு பாடத்திற்கான பெறுபேறு கிடைக்கவில்லை. யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஒருவர் ஆறு பாடங்களில் விசேட சித்தி பெற்றுள்ளார்.

### கொழும்பில்

ராக நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவர எதிர்க் கட்சிகள் முயற்சிகளை மேற் கொள்வதாக தெரிவிக்கப் படுகிறது.

இவேளை பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பிரேமதாஸ உடுகம்பொலவின் அறிக்கை குறித்து விசாரணைக் குழு ஒன்று நியமிக்க வேண்டும் என்று அனுரா பண்டாரநாயக்கா விடுத்த கோரிக்கைக்கு எதிர்க் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து விசாரணைக் குழு ஒன்று அமைக்ககோரி போராட்டம் நடத்தவும் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினேஷ் குணவர்தனா கருத்துத் தெரிவிக்கையில், அனுராவின் கோரிக்கையைத் தனது கட்சி ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

### புலிகளுடன்

களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குப்புதியதந்திரோபாயம் ஒன்றைத் தான் வைத்துள்ளதாகவும், இத்தந்திரோபாயத்தின் மூலம் புலிகளை முழுமையாகத் தோற்கடிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



லெப்டினனட் ரகுராம்
(பழனிவேல் நந்தவரதன்)

வீரஜனனம் 20-4-1972 — வீரச்சாவு 10.4.1991

விடுதலை உணர்வு உன் நெஞ்சினில் பொங்க
வெஞ்சமர் புரிந்து வெறியர் படை அடங்க
மண்மானம் காத்திட மறத்தமிழா நீயும்
மார்பினில் குண்டுபட்டு காரைக்களத்தினில் சாய்ந்தாய்

குலனையூர்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை (சி/4146) பெற்றோர்



## மலிவு விற்பனை

புது வருடத்தை முன்னிட்டு
எமது ஸ்தாபனத்தில்
சில பாதணிகள்
மலிவு விற்பனை
செய்யப்படுகின்றன

அகிலன்பாதணி நிலையம்

121/1 பெரிய கடை
யாழ்ப்பாணம்

[சி/4143]



## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சோமசுந்தரம்

காரைநகர் களபூமியைச் சேர்ந்தவரும் ஓய்வு பெற்ற பாடசாலை அதிபருமான வைத்திலிங்கம் சோமசுந்தரம் காரைநகரில் காலமானார். அன்னார் தனலட்சுமியின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம், விஜயலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாருக்கு அஞ்சலியும், துக்க அனுஷ்டிப்பும் 10-04-92 வெள்ளிக்கிழமை (இன்று) 784/1, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியிலுள்ள திரு. என். தேவராசா (பெறாமகன்) அவர்களின் இல்லத்தில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

ஸ்ரீ கண்ணன் ஸ்டோர்ஸ்,
திருநெல்வேலிச் சந்தி.

தகவல்:
திருமதி சோ. தனலட்சுமி
(மனைவி)

[2439]



## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4-00, 6-00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

## Eagles Over London

(லண்டன் மேலாக கழுகுகள்) (சி/4144)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.